Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


மொறாயஸ்
பல், மூக்குக் கண்ணாடியகம்
பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.)
இல. 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 7893.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 20 (02.01.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:94

# கிழக்குப் பகுதியில் வெள்ளப் பெருக்கு
# ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்வு

## கொட்டும் மழையால் தொடரும் அவலம்

(மட்டக்களப்பு)

சுனாமி கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து கொட்டும் மழையினால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் - பல பகுதிகள் நீரில் மூழ்கும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த வெள்ள அபாயத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் பாதிக்கப் பட்ட மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக ஏறாவூர் நகரம், ஏறாவூர் பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, வெல்லாவெளி (12 ஆம் பக்கம் பார்க்க)



## உதவிப்பொருட்களுடன் 200 விமானங்கள் வரும்!

### சமூக சேவைகள் அமைச்சர் சுமேதா ஜயசேன



(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்களை எடுத்துக்கொண்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 200 விமானங்கள் இலங்கைக்கு வருவதற்குத் தயாராக இருப்பதாக சமூக சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித் தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட் களுடன் இதுவரையில் 20 இற்கும் அதி கமான விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கி பொருட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் நேற்று நில அதிர்வு!

### அச்சப்படத் தேவையில்லையென அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் மலைநாட்டின் சில பகுதி களிலும் நேற்று நண்பகல் நில அதிர்வு உணரப்பட்டதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. எனினும், இந்த நில அதிர்வின் காரணமாக எந்த ஒரு இடத்திலும் பாதிப்புக் கள் ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக புவியியல் அகழ்வாய்வு மையத்தின் தலைவர் சரத் வீரவர்ணகுல தகவல் தருகையில் -

நேற்று நண்பகல் 12.25 மணியளவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாகப் பல் வேறு பகுதிகளில் இருந்தும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. இதனையடுத்து நாம் அமெரிக்க சுனாமி புவியியல் மையத்துடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் முதலில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியின் தாக்கத்தினால்

## வடக்கு - கிழக்கில் மட்டும் 16, 656 பேர் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

சுனாமி கடற் கொந்தளிப்பின் தாக்கத் தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டும் 16 ஆயிரத்து 656 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளதாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் நேற்றுமாலை வெளியிட்ட அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்ட ரீதியாக உயிரிழந் தோர் விபரம் வருமாறு.

அம்பாறை - 11,225, மட்டக்களப்பு - 2,040, யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு - 778, முல்லைத்தீவு - 1,666, திருகோணமலை - 947.


இந்தச் சம்பவத்தில் மொத்தமாக: 9,742 பேர் காயமடைந்தனர்.

அதில் அம்பாறை - 2,800, மட்டக்களப்பு - 2,100, யாழ்ப்பாணம் வடமராட்சிக் கிழக்கு - 1,218, முல்லைத்தீவு - 1,386, திருகோண மலை - 2,238 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் 18,481 பேர் காணாமற் போயுள் ளனர். இவர்களில் அம்பாறை - 5,300, மட் டக்களப்பு - 6000, யாழ்ப்பாணம், வடமராட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 1500 மரைன் படையினருடன் அமெரிக்க போர்க் கப்பல் வருகிறது!



யு.எஸ்.எவ். பொன் ஹோம் ரிச்சட் கப்பல்

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உதவி மீட்புப் பணிகளில் ஈடுபடவென 1500 அமெரிக்க மரைன் கடற் படையினர் விமானந் தாங்கி கப்பலுடன் இலங்கை வரவுள்ளனர்.

அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரிட் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்டார். இந்த செய்தியாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அட்டகாசம்!

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் குடத்தனை மத்தி நலன்புரி நிலையத்துக்குள் புகுந்த படையின ரால் பொதுமக்கள் இருவரும் அரச சார்பற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய நாளிதழுடன் அழகிய வர்ணக் கலண்டர் இணைக் கப்பட்டுள்ளது. தவறாது கேட்டு வாங்குங்கள்.

கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.

## மெடிசின் டூ மொன்டே நிறுவனத்தின்
# வைத்திய அதிகாரிகள் குழு நேற்று வடமராட்சிக்கு விஜயம்

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு காயமடைந்த மற்றும் தொற்றுநோய்களுக்கு இலக்காகி பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு வைத்திய சேவை வழங்க பிரான்ஸ் நாட்டை தலைமைச்செயலகமாகக் கொண்டியங்கும் "மெடிசின் டூ மொன்டே" என்ற நிறுவனத்தைச் சேர்ந்த வைத்தியக்குழுவொன்று நேற்றுப் பிற்பகல் மந்திகை அரசினர் வைத்தியசாலையை வந்தடைந்துள்ளது.

சத்திரசிகிச்சை நிபுணர், பொது வைத்தியநிபுணர், மயக்கமருந்து நிபுணர், மயக்க மருந்து ஏற்றும் வைத்தியர் ஆகியோரும் இரண்டு தாதிய உத்தி யோகத்தர்களுமாக ஐவர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளார்கள்.

வடமராட்சியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு இன்று முதல்நேரடியாகச் சென்று வைத்திய சேவைகளை மேற்கொள்ளவுள்ள இவர்கள் அந்தந்த இடங்களிலேயே சிகிச்சையளிப்பார்கள். அங்கு மேற்கொள்ள முடியாத சிகிச்சைகள் மற்றும் சத்திர சிகிச்சைகளை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளர்களை அழைத்து வந்து சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

இதேவேளை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடல் கொந்தளிப்பால் பாதிப்புற்று காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு புலம்பெயர் நாடு ஒன்றில் இருந்து வருகைதந்துள்ள வைத்திய அதிகாரி ஒருவர், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா சகிதம் வந்து பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்ததுடன், கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா ஐந்நூறு ரூபா வீதம் நேற்றுமாலை வழங்கினார். (14)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சுனாமி கல்வி நிவாரணப்பணி

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் வகையில் தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் சுனாமி கல்வி நிவாரணப் பணி எனும் செயற்திட்டத்தை உருவாக்கவுள்ளனர்.

இந்தத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக, அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனத்தினர் ஆகியோரை இணைத்து பொருட்களை சேகரிப்பதோடு, அவர்களுக்காக நிதியம் ஒன்றினையும் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தச் செயற்திட்டத்திற்காக நல்லூர் கம்பன் கோட்டத்திற்கு முன்பாகவுள்ள தமிழ் மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் ஒரு செயலணியும், வடமராட்சிப் பகுதியில் மற்றைய செயலணியுமென இரண்டு செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ விரும்பும் தர்மசிந்தனையுள்ளவர்களை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் செயலணிக் குழுக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

# வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று

யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.வணிகர் க்ழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்டத்தின் வர்த்தக சங்கங்களின் சம்மேளத்தின் தலைவர் மு.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்களை வழங்குவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட நலன்புரிச் சட்டத்தின் நன்மைகள் குறித்த கருத்தரங்கு நாளை இடம்பெறவுள்ளதாகவும் எனவே இந்தக் கருத்தரங்கில் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (90)

## கடற்கொந்தளிப்பால்
# உயிரிழந்த பொதுமக்களுக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

வடகிழக்கில் கடல் கொந்தளிப்பால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவும் காயமுற்றவர்கள் குணமடையவும் உறவினர்களை இழந்து தவித்து நிற்போர் மன ஆறுதல் அடையவும் வேண்டி எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவலகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்த பிரார்த்தனை நிகழ்வில் ஆலயங்கள் இந்துசமய நிறுவனங்கள், இந்து மன்றங்கள் அறநெறிப் பாடசாலைகளை சேர்ந்தோர், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தெரிவித்தார்.

# பொதுச்சபைக் கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுக்கான பொதுக்கூட்டம் இன்று பகல் 12 மணியளவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே சகல தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளையும் கலந்து கெள்ளுமாறு ஒன்றிய செயலாளர் கோகுலன் தெரிவித்துள்ளார். (34)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
# நிதி சேகரிக்கும் பணியில் யாழ்.வணிகர் கழகம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நிதி சேகரிக்கும் பணியை யாழ்.வணிகர் கழகம் மேற்கொண்டு வருகின்றது.

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கு முதற்கட்டமாக ஒருதொகுதி நிவாரணப் பொருட்கள் அவசரமாக வழங்கப்பட்டது.

அடுத்தகட்ட நிவாரணப் பொருடகளுக்கான நிதி சேகரிக்கும் பணியில் வணிகர் கழகம் ஈடுபட்டுள்ளது.

உதவி வழங்கவிரும்புபவர்கள் ஹற்றன் நஷனல் வங்கியில் 02-8969401-3 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியினைச் செலுத்தமுடியும் என்று யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

# மந்திகை வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்து கையளிப்பு

(வடமராட்சி)

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருந்து வகைகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா நேற்றுமாலை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளையிடம் கையளித்தார். இம் மருந்துப் பொருட்களை கொழும்பிலுள்ள பொது அமைப்புகளிடம் இருந்து சேகரித்து எடுத்து வந்திருந்தார். மேலும் இன்னுமொரு தொகுதி மருந்து பொதிகளை கொழும்பு தமிழ் சங்கம் அனுப்பி வைக்கவுள்ளது எனவும் தெரியவருகிறது. (17)

# மூன்று நலன்புரி நிலையங்கள் தென்மராட்சியில் மூடப்பட்டன

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மூன்று நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்தப் பகுதி நலன்புரிநிலையங்களில் தங்கியிருந்த அம்பன் மணற்காடு, குடத்தனை ஆகிய இடங்களைச் சேர்ந்த குடும்பங்கள் தமது இடங்களுக்கு சென்றுள்ளன.

இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், இடைக்குறிச்சி தேவாலயம், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் போன்ற நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் வெளியேறியதை அடுத்து மூடப்பட்டன.

வரணி மகாவித்தியாலயத்தில் இருந்து 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமதுஇருப்பிடங்களுக்கு சென்றனர். தற்போது 126 குடும்பங்கள்வரை தங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (29)

# நலன்புரி நிலையங்களுக்கு சுத்திகரிப்பாளர் நியமனம்

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் சுகாதாரத்தினைப் பேணுவதற்கென சுத்திகரிப்புத்தொழிலாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியிலுள்ள டிறிபேக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகிய நலன்புரி நிலையங்களில் பணியாற்றுவதற்கே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களில் பெருமளவு கழிவுப் பொருட்கள் தேங்கியிருப்பதால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயங்களை தடுப்பதற்காகவே நகரசபை இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதேவேளை சாவகச்சேரி பிரதேசசபை, பளை மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்காகச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அங்கு பணிக்கு அமர்த்தியுள்ளனர். (29)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டத்திலுள்ள சகல கிளைகளினதும் தலைவர் செயலாளர், பொருளாளர் மற்றும் வலய அமைப்பு பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இந்தக் கூட்டத்தில் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலர் குமாரசுவாமி அறிவித்துள்ளார்.

★ ★ ★

சகல கல்விவலயத்திலும் உளவளத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் இத்துறையில் ஆர்வமுள்ள அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ்.கல்விவலய பணிமனை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகலரும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார்.

★ ★ ★

யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் புகுமுக, பழைய மாணவர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளதனால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

★ ★ ★

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர், ஆசிரிய மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கலாசாலையின் அதிபர் ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தி தெரிவித்தார்.


நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும்
இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்),
சாயாசிங், லைலா,
வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்
விஜயகாந், லயா, சீதா, சரத்பாபு,
ராதாரவி நடித்த
கஜேந்திரா
(ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜித் [இருவேடம்] பூஜா நடித்த
அட்டகாசம்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
AIRFORCE I

சிறு விளம்பரம்

வாகனம் விற்பனைக்கு

டொல்பின் வான் (56 XXX) Full seats, New Engine, A/C, Radio set மற்றும் MD 90 மோட்டார் சைக்கிள் (GC XX) விற்பனைக்குண்டு.
சுவக்கின்பிள்ளை, 4 ம் கட்டை, ஆனைக்கோட்டை, 222 3679, 0776 639736, 0112714135

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

நிதியுதவிக் காட்சி
இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவு முகமாக இப்படக்காட்சி வசூல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்படும்.
M.G.R [இருவேடம்], லதா, மஞ்சுளா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

பெண் கணக்கு லிகிதர் தேவை

இல 11 ராமையா செட்டியார் லேன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நாதன்ஸ் சினிமாவில் பணியாற்ற பெண் கணக்கு லிகிதர் தேவை. தகுதியுடையவர்கள் உரிய சான்றிதழ்களுடன் நாளை காலை 10 மணிக்கு மேற்படி முகவரிக்கு சமுகம்தரவும்
நாதன்ஸ் சினிமா, யாழ்ப்பாணம்.
(C/ 3590)

பணியாட்கள் தேவை

யாழ்.மாநகரில் இயங்குகின்ற கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட இலத்திரனியலும் உல்லாசப் பிரயாணத்துறை சம்பந்தப்பட்ட வியாபாரத்துடன் தொடர்புள்ள ஸ்தாபனத்துக்கு கீழ் கண்ட பணியாட்கள் தேவைப்படுகின்றனர்.

1. முகாமையாளர்
2. காசாளர்
3. லிகிதர்
4. தொழில்நுட்பவியலாளர்
5. சாரதி
6. வேலையாட்கள்

கல்வித்தகைமை, அனுபவச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளின் பிரதிகளுடனும், 2 சிபாரிசுக் கடிதங்களுடனும் விண்ணப்பிக்கவும். ஆங்கில அறிவும், உல்லாசப் பிரயாணத்துறை சம்பந்தப்பட்ட அறிவும் மேலதிக தகைமையாகக் கருதப்படும். 7 நாட்களுக்குள் விண்ணப்பத்தைக் கீழ் கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு : விளம்பர இல.34
c/o 267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (1010)

# 3 வருடங்களுக்கு தேர்தலே வேண்டாம் தேசியசபையால் நாட்டைக் கட்டியெழுப்பவும்

## ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினையால் மூன்று வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்தாது, தேசிய சபையை அமைத்து நாட்டைக் கட்டியெழுப்புமாறு ஜாதிக ஹெல உறுமய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் தேசிய சபை, தேசிய திட்டத்தின் கீழ் மூன்று வருடங்களுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

மருதானையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தேசிய சபையில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

தேசிய சபையை அமைத்த பின்பு நாட்டின் அனைத்து நடவடிக்கைகளும் ஒரு கட்சியினதோ அல்லது ஒரு குழுவினதோ தீர்மானத்துக்கு அமையாது, தேசிய சபையின் தீர்மானத்துக்கு அமையவே இடம் பெறவேண்டும்.

தமது கட்சியின் இந்த ஆலோசனையை அரசு கவனத்தில் எடுக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(தே)

# 542 பல்கலை மாணவர்களை தென்பகுதியில் காணவில்லை!

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்கொந்தளிப்புப் காரணமாக தென்னிலங்கையில் 3 விரிவுரையாளர்கள் மற்றும் 7 பல்கலைக் கழக மாணவர்கள் உயிரிழந்ததுடன், 542 பல்கலைக்கழக மாணவர்கள் காணாமற்போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளர் வண. மீகொட பஞ்ஞாலோக தேரர், பெரதெனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் றமணி ஹேரத், றுகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் மான்தல் தேவேந்திரா ஆகிய மூவருமே உயிரிழந்த விரிவுரையாளர்களாவர்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல் கலைக்கழகத்தின் அசங்க கல் பகே, அமில ஜெயசேகர, இந்திக ஆகிய மூன்று மாணவர்களும் களனிப் பல்கலைக்கழகத்தின் சாசிகா, எல்.பி.டி.ஜெயலங்கா ஆகிய இரண்டு மாணவர்களும், றுகுணு பல்கலைக்கழகத்தின் நடேபக்சாகி என்ற மாணவரும் பெரதெனியப் பல்கலைக்கழகத்தின் எச்.டி.சி. நிசாந்தி ஆகிய 7 மாணவர்களுமே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களைவிட 542 மாணவர்கள் காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பான விபரங்கள் தெரிந்தால், 071-4846636 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை அரச செயலகம் நிவாரணம் வழங்கலில் பாகுபாடு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்துக்கு எடுத்துவரப்படும் நிவாரணப் பொருட்கள் இராணுவத்தால் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் சென்றடைவதில் தாமதங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மாவட்ட அரசாங்க அதிபர் செயலகத்துக்கு வந்துசேரும் பொருட்கள், பாதிக்கப்படாத சிங்கள மக்கள் வாழும் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. மாவட்டச் செயலகத்தின் காணிக்கிளை அலுவலகத்தில் நிவாரணப் பொருட்கள் மலைபோன்று குவித்துவைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் அத்தியாவசியப் பொருட்கள் எவையும் தமிழ் - முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகளவு அனுப்பி வைக்கப்படவில்லை. உடுதுணிகள் அதிகளவு இந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. குழந்தைகளுக்குத் தேவையான பால்மா, பால் புட்டிகள் அதிகளவில் இருந்தபோதும் அவை வழங்கப்படவில்லை.

பாதிப்பு ஏற்படாத பதவி சிறிபுர பிரதேச செயலாளர் பிரிவுக்கு 77 கூடாரங்களும், கொமரன் - கடவெலவுக்கு 40 கூடாரங்களும், 3671 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 40 கூடாரங்களும் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருட்களைத் திருகோணமலை மாவட்டத்துக்கு எடுத்துவரும் பெரும்பான்மை இன மக்கள் இந்த வேறுபாடுகளை மறந்தாலும், இந்த மாவட்ட செயலகத்தில் கடமை புரியும் அதிகாரிகள் துவேசத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாக அங்கு பணிபுரியும் தமிழ் - முஸ்லிம் அலுவலர்களுக்கும், சிங்கள அலுவலர்களுக்குமிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

# இஸ்ரேலிய உதவியை அரசாங்கம் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்யும் வகையில் 60 படையினர் உட்பட 150 மீட்புப் பணியாளர்களை இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்ப இருந்தபோதிலும், இலங்கை அரசு அதனை நிராகரித்ததால் இஸ்ரேல் தனது மீட்புப் பணியாளர்களை அனுப்பும் திட்டத்தை ரத்துச் செய்துள்ளது.

இஸ்ரேல் படையினரும் மீட்பு பணிக்கு இங்கு வருவதை விரும்பாத காரணத்தாலேயே இலங்கை அரசு இதனை நிராகரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் இது தொடர்பாக இரு நாட்டு அரசுகளும் நேரடியாகப் பேச்சு வார்த்தை எதனையும் நடத்தவில்லையெனத் தெரியவருகிறது.

இலங்கைக்கு வரவிருந்த இஸ்ரேலியப் படையினருக்கு, கொழும்பில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இயலாத காரணத்தாலேயே இது நிராகரிக்கப்பட்ட தாக, இலங்கைத் தூதுவர் தெரிவித்ததாக ஜெருசலம் போஸ்ற் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் இந்த மீட்புக் குழுவுக்குப் பதிலாக அவசர உதவிப் பொருட்களுடன் சேர்த்து, சிறிய குழுவொன்றை அனுப்பவுள்ளதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இஸ்ரேலில் உள்ள வேறு பல மக்கள் அவசர கால உதவிப் பொருட்களை இலங்கை உட்பட்ட கடற்கொந்தளிப்பால் பாதிக்கபட்ட ஏனைய நாடுகளுக்கு அனுப்பிவைத்துள் ளன.

## கடற்கொந்தளிப்பில்

# மூன்று வைத்தியர்கள் பலி; 40 பேரைக் காணவில்லை!

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றிய மூன்று வைத்தியர்கள் உயிரிழந்ததுடன், 40 பேர் காணாமல்போயுள்ளதாக அரசாங்க மருத்துவ அலுவலக - குழுவைச் சேர்ந்த டொக்டர் உதிதா ஹேரத் தெரிவித்தார் .

ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் கடமையாற்றிய - ஈ.என்.ரி விசேட வைத்தியர் ஹரிஸ் மற்றும் வைத்தியர் அஷ்ரப் இவர்களை விட, தென்மாகாண சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் வீரசேகர ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களைவிட நாட்டின் வேறு பகுதிகளில் வைத்தியர்கள் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், டொக்டர் அனில் ஜெயசிங்கவின் தொலைபேசி இலக்கமான 2692534 அல்லது டொக்டர் பிமான்தா குணசேகரவின் தொலைபேசி இலக்கமான 0777 - 6751179 அல்லது டொக்டர் உதிதா ஹேரத்தின் தொலைபேசி இலக்கமான 0777-708336 அல்லது 0773-166337, 0773-166338 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ அறிவிக்கலாமென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு பிரதேசங்களில் தற்போது 1000 வைத்தியர்கள் சேவையில் உள்ளனரெனவும் - ஆனாலும், இந்த தொகை போதாமல் உள்ளதால் மேலதிகமாக வைத்தியர்களும், தொண்டர்களும் தேவைப்படுவதாகவும், எனவே பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பணியாற்ற ஆர்வமுள்ளோரை மேலே தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்புகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இராணுவத்தினரின் சடலங்கள் தமிழ் நாட்டுக் கடற்கரையில்!

(கொழும்பு)


இராணுவத்தினரது என நம்பப்படும் பத்து சடலங்கள், தமிழ்நாடு கன்னியாகுமரி கடறகரையில் ஒதுங்கியிருந்து இந்திய இராணுவத்தினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைவடைந்து போயுள்ள இந்தப் பத்துச் சடலங்களையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு, இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராணுவ உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களது சடலங்களும், பெறுமதிவாய்ந்த பல பொருட்களும் கடல் அலையில் அள்ளுண்டு இந்தியாவை அண்மித்த கடற்கரைகளுக்கு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்னும் இரண்டொரு நாட்களுக்குள் இவ்வாறு அதிகளவு சடலங்கள் கரையொதுங்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# ரயிலில் பயணம் செய்த 1200 பேரின் சடலங்கள் மீட்பு!



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பால் - கொழும்பிலிருந்து காலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த, ரயிலில் பயணம் செய்த சுமார் 1200 பேர் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து காலி நோககிச் சென்றுகொண்டிருந்த சமுத்திரதேவி ரயில் - கடற்கொந்தளிப்பில் சிக்கியதிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது. கடற்கொந்தளிப்பால் ரயிலின் எட்டுப் பெட்டிகளும் அங்கும் இங்கும் இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. இதனால் மேலும் 1500 பயணிகள் இந்த ரயிலில் பயணம் செய்தனர்.

இந்த ரயில் விபத்தில் சிக்கிய தகவலில், அதிகாரிகளுக்கு தாமதமாகவே தெரியவந்ததுடன் மீட்புப் பணிகளும் தாமதமாகவே இடம்பெற்றன. இதனால் இந்தக் கோர விபத்தில் சிக்கிப் படுகாயமுற்ற பலரும் உயிரிழந்தனர். பல நாட்களாக இடம்பெற்ற மீட்புப் பணிகளில் சுமார் 1200 சடலங் கள் மீட்கப்பட்டதாகத் தெரியவரு கிறது.

உலகில் இடம்பெற்ற மிக மோசமான - அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்திய ரயில் விபத்தாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இந்தியாவில் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுறாவளியால் தாக்கப்பட்ட ரயில - ஆற்றில் வீசப்பட்டு ரயிலில் பயணம் செய்த 800 பேர் கொல்லப்பட்ட சம்பவமே மிகமோசமானதாகக் கருதப்பட்டது.

# அரசின் நீண்டகாலத் திட்டங்கள் குறித்து இராஜதந்திரிகளுடன் ஜனாதிபதி ஆராய்வு

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாகவும், அரசாங்கத்தால் உடனடி நீண்டகாலத்திட்டங்களை விளக்கும் வகையிலும், ஜனாதிபதி சந்திரிகா நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவன பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்ததாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பானது, இலங்கைக்குப் புதியதாகும். இது இலங்கைக்கு எதிர்பாராத அனுபவமாகும். இவ்வாறான பெரும் துயரொன்றை எதிர்கொள்வது தொடர்பாக நாம் எந்தவித தயார்படுத்தலையும் மேற்கொண்டிருக்கவில்லை. இந்த அனர்த்தம் நிகழ்ந்து 48 மணிநேரத்திற்குள் சகல தொடர்புகளும் செயலற்றிருந்தன. ஆனால், தற்போது நிலமை சுமூகமாக உள்ளது.

விசேட செயலணிக்குழு ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து செயற்படுத் தப்படுகிறது. பாதிப்படைந்த பகுதி களை மீள்கட்டமைப்பு செய்வதற்கு, மீள்கட்டுமான நிதி அந்தப் பகுதி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது உடனடி நீண்ட காலத்திட்டங்களுக்கு சகோதர நாடுகளின் உதவியை நாம் வரவேற்கிறோம்.

உடனடியாக வீதி திருத்தம், தொலைத்தொடர்பு, வைத்தியசாலைகள் மற்றும் வீடுகள் என்பன திருத்தம் செய்யப்படவுள்ளன.

சகல கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மீள் கட்டமைப்புப் பணிக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தென்னாசியப் பிராந்தியத்தில் பூகம்பத்தை முன் கூட்டியே அறியும் நிலையமொன்றை அமைப்பது குறித்து பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுடனும் கலந்துரையாடியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்தியா, பங்களாதேஷ், கனடா. அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, ஜப்பான், மலேசியா, சுவிற்சர்லாந்து, ரஷ்யா, பிரிட்டன், நோர்வே, இத்தாலி, ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும், யு.என்.டி.பி ,உலகவங்கி ,சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் ஜனாதிபதியின் செயலர் கருணாரட்ன, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## உள்ளூர் போட்டிகளில்

# விளையாட வேண்டாமென டெண்டுல்கருக்கு அறிவுரை!

(மும்பை)

உள்ளூர் போட்டிகளில் பங்கேற்க வேண்டாமென சச்சின் டெண்டுல்கருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இந்திய அணியின் உடலியக்க வல்லுநர் அன்ட்ரூ லீபஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி கப்டன் சௌரவ் கங்கூலி, துணைக்கப்டன் ராகுல் ராவிட் உள்ளிட்ட பலர் ரஞ்சி கிரிக்கெட் போட்டியில் விளையாடி வருகின்றனர். இதையடுத்து, மும்பை அணிக்காக டெண்டுல்கர் விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபையுடனான இனிமேலான தொடர்பு குறித்து மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய லீபஸ் கூறியதாவது -

அவுஸ்ரேலியாவில் உள்ள முழங்கை சிகிச்சை வல்லுநர்களிடம் சச்சினின் நிலை குறித்து வியாழக்கிழமை விவாதித்தேன். அவர்கள் இந்த சீசன் முழுவதும் உள்ளூர் போட்டிகளில் டெண்டுல்கர் விளையாடாமல் இருக்கட்டும். அப்போதுதான் அவரது 'டெனிஸ் எல்போ' பிரச்சினை மேலும் சீராகும் என்றனர்.

இந்தத் தகவலை டெண்டுல்கரிடமும் தெரிவித்துவிட்டேன். டெனிஸ் எல்போ பிரச்சினை காரணமாக ஹொலன்ட் முத்தரப்பு தொடர், நட்வெஸ்ட் சலஞ் தொடர், ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி ஆகியவற்றில் சச்சின் விளையாடவில்லை.

இவைதவிர இந்தியாவில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவில்லை.

இந்திய அணியின் உடலியக்க வல்லுநராக இனி தொடரமாட்டேன். 'பிஸியோதெரபி' குறித்து மேலும் படிப்பதற்காக அவுஸ்ரேலியா செல்லவுள்ளேன். பெப்ரவரி முதல் 4 மாதகாலம் அப்படிப்பைப் படிக்கவுள்ளேன். இந்திய கிரிக்கெட் சபை வாய்ப்புக் கொடுத்தால் பகுதிநேரமாகப் பணியாற்றுவேன். என்



றாலும் அடுத்தவாரம் ஜக்மோகன் டால்மியாவைச் சந்தித்து எனது பணி, பதவி குறித்து விவாதிக்கவுள்ளேன் என்றார் லீபஸ்.

---

### சுனாமி நிவாரண நிதிக்காக

## உலக லெவன் அணிக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் மோதல்

(சிட்னி)

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டும்முகமாக உலக லெவன், அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான நிவாரண நிதி ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கு அழைபபு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களுக்கும் இது குறித்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என அந்தச் சம்மேளனத்தின் நிறைவேற்று அதிகாரி டிம்மே தெரிவித்துள்ளார்.

அந்த ஆட்டம் ஜனவரி 11 அல்லது 12 ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.


வீரர்களிடம் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து, சர்வதேச கிரிக்கெட் சபையிடம் அந்தப் போட்டிக்கு அனுமதி கோரப்படும். இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளைத் தவிர இலங்கை உள்ளிட்ட மற்றைய நாடுகள் அந்தப் போட்டியில் பங்கேற்க முடியும் எனவும் மே தெரிவித்தார்.

இதற்கிடையே, சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டுவதற்காக இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருதினத் தொடரை நடத்துவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் ஆலோசனை செய்து வருகிறது.

---

### கடந்த ஆண்டில்

# அதிக விக்கெட் - கும்ளே! அதிக ஓட்டங்கள் - லாங்கர்!



2004 ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 74 விக்கெட்டுக்களை கைப்பற்றி இந்திய வீரர் அனில் கும்ளே முதலிடத்தில் உள்ளார்.

2004 ஆம் ஆண்டில் நடந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் மற்றும் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பந்துவீச்சில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே முதலிடத்தைப் பிடித்துள்ளார். கும்ளே மொத்தம் 74 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். சராசரி 24.84 ஆகும்.

கும்ளேக்கு அடுத்தபடியாக அவுஸ்ரேலிய வீரர் வோன் 70 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். முரளீதரன் 47 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 5ஆவது இடத்தில் உள்ளார். காயம் காரணமாக சமீபகாலமாக நடந்த போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஓட்டங்கள் குவிப்பில் அவுஸ்ரேலிய வீரர் ஜஸ்ரின் லாங்கர் முதலிடத்தில் உள்ளார். அவர் கடந்த ஆண்டில் 5 சதம் உட்பட மொத்தம் 1481 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 54.85 ஆகும்.

அவுஸ்ரேலிய அணியின் மற்றொரு வீரர் மார்ட்டின் 1353 ஓட்டங்கள் எடுத்து 2 ஆவது இடத்தில் உள்ளார். இதில் 5 சதங்கள் அடங்கும். சராசரி 56.38 ஆகும்.

3 ஆவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் உள்ளார். அவர் மொத்தம் 1288 ஓட்டங்கள் குவித்துள்ளார். சராசரி 80.50 ஆகும்.

அதிக அளவில் பிடியெடுத்தவர் அவுஸ்ரேலிய விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட் முதலிடத்தில் உள்ளார். அவர் மொத்தம் 58 முறை பிடியெடுத்துள்ளார்.

---

# முன்னிலை வீராங்கனைகளுடன் போட்டியிடுவதற்குத் தயார்!

## நவரத்திலோவா சவால்

முன்னிலை வீராங்கனைகளுடன் போட்டியிடும் திறனுடனேயே இருக்கிறேன் என 48 வயதாகும் மார்ட்டினா நவரத்திலோவா தெரிவித்துள்ளார்.

இந்த ,வாரம் மெல்பேர்னில் தொடங்கும் அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியை முன்னிட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த நவரத்திலோவா, மேலும் அவுஸ்ரேலிய ஓபன் போட்டிக்காக என்னைத் தயார் செய்து கொண்டு வருகிறேன். மகளிர் ரெனிஸ் உண்மையிலேயே வலுப்பெற்று இருக்கிறது. அதற்கேற்ற வகையிலேயே நானும் இருக்கிறேன். திறமை குறைந்துள்ளது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்காக வருத்தப்படுகிறேன் என்றார் நவரத்திலோவா.

வீரர்கள் ஓய்வை அறிவித்துவிட்டுப் பின்னர் மீண்டும் விளையாட வரும்போது ஊடகங்கள் இரட்டைவேடம் போடுகின்றன எனக் குற்றம் சாட்டினார் அவர்.

---

விளையாட்டு

# எமது அணியின் வெற்றிகள் இவ்வாண்டிலும் தொடரும்!

## இங்கிலாந்து அணித்தலைவர்

2005 ஆம் ஆண்டிலும் எங்களது வெற்றிகள் தொடரும் என இங்கிலாந்து அணிக் கப்டன் மைக்கல் வோகன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்தொடர்நது தெரிவிக்கையில் -

கிங்ஸ்மீட்டில் வியாழக்கிழமை நடைபெற்ற 2 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி, போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாகவே நிறுத்தப்பட்டதால், தென்னாபிரிக்க அணி தோல்வியிலிருந்து தப்பியது.

378 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுகளை இழந்து 290 ஓட்டங்களை எடுத்திருந்தபோது, வெளிச்சமின்மையால் நடுவர்கள் ஆட்டத்தை நிறுத்தினர். மேலும் 15 ஓவர்கள் வீசப்பட வேண்டியிருந்த அந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி ஏறக்குறைய எழுதப்பட்ட ஒன்றாகவே இருந்தது.

"தென்னாபிரிக்க அணியை மீண்டும் வீழ்த்த வேண்டும் என்பதற்காக அணியினர் மேற்கொண்ட மிகப்பெரிய முயற்சி அது. அதற்காக எனது வீரர்களைப் பாராட்டுகிறேன்.


இயற்கைக்கு (மேகக்கூட்டம்) எதிராக நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது. என்றாலும் இந்தத் தொடரில் 1 - 0 என முன்னிலை பெற்றுள்ளது பெருமிதம் அளிக்கிறது."

"அடுத்து கேப்டவுனில் நடைபெறும் போட்டியிலும், 2 ஆவது டெஸ்ட் போட்டியின் கடைசி 3 தினங்களில் ஆடிய ஆட்டங்களைப்போல் வெளிப்படுத்தி முன்னேற்றம் காண்போம்.

"2004 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகளை, 2005 புத்தாண்டிலும் தொடரவேண்டும் என்பதே அணியின் ஒட்டுமொத்த இலக்கு" எனத் தெரிவித்தார். 2004 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி விளையாடிய 13 டெஸ்ட் போட்டிகளில் 11 இல் வெற்றி கண்டது. 2 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன.

இது தென்னாபிரிக்க அணியுடன் தற்போது 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்று வருகிறது. இந்த இரு அணிகளிடையேயான 3 ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் இன்று தொடங்குகிறது.

---



தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையே இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் டேர்பனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, கடைசிநாளில் போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி முன்னதாகவே முடிக்கப்பட்டு, சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. இதற்கு இங்கிலாந்து வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'மின்னொளி வெளிச்சத்தில் போட்டியை நடத்தலாமே... ஒருநாள் போட்டியில் 50 ஓவர்கள் போடப்படுகிறதே' என்றுகூறி மைதானத்திலேயே அமர்ந்துவிட்டனர். கடைசியில் வென்றது நடுவர்கள்தான். இங்கிலாந்துக்கு இதனால் வெற்றிவாய்ப்புப் பறிக்கப்பட்டாலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டியது அவசியமென இந்த அணியைச் சேர்ந்த வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

---

# தென்னாபிரிக்க அணியின் திறமை தேய்கின்றதாம்!

## சிம் ஹொக்ஸ் குற்றச்சாட்டு

(டேர்பன்)

'தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் திறமை மங்கிவருகிறது. அணியை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்' என்று காட்டமாக தனது கருத்தை சிம் ஹொக்ஸ் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அவுஸ்ரேலியாவுக்கு நிகராக வலம்வந்த அணி தென்னாபிரிக்கா. இப்போது பங்களாதேஷுக்கு நிகராக விளையாடி வருகிறது. ஒருகாலத்தில் இந்த அணியைக் கண்டு மிரண்ட இங்கிலாந்துகூட, கடந்த 2 டெஸ்டில் எளிதாகச் சமாளித்துவிட்டது.

டேர்பன் டெஸ்டில்கூட நூலிழையில்தான் தோல்வியைத் தவிர்த்தது தென்னாபிரிக்கா. இந்த நிலையில் இந்த அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் பாட் சிம்ஹொக்ஸ் நேற்று அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருப்பதாவது -

'தென்னாபிரிக்க அணியின் திறமை நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போகிறது. முன்னாள் வீரர்கள், கிரிக்கெட் நிர்வாகிகள் கலந்துபேசி இதற்கு ஒரு முடிவுகாண வேண்டும். கடந்த சில தொடர்களாக தென்னாபிரிக்க அணியின் செயற்பாடுகள் அதிருபதி அளிப்பதாகவே உள்ளது.

இரண்டாவது இடத்தில் இருந்த ஒரு அணி ஆறாவது இடத்தை நோக்கித் தள்ளப்பட்டதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. தென்னாபிரிக்க அணியின் முன்னோடிகளான கெப்லர் வெசல்ஸ், பாரி ரிச்சர்ட்ஸ், அலன் டொனால்ட் போன்றவர்களை அழைத்துப் பேசினால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். கப்டன், பயிற்சியாளர், தேர்வுக்குழுவினரென அனைவரையும் மாற்றியமைக்கவேண்டும்' என்றார்.

சிம்ஹொக்ஸின் கருத்துக்கு முன்னாள் வீரர்களான அன்ட்ரூ ஹட்சன், அலன் டொனால்ட் போன்றவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு

# அரசு உதவிகள் அனுப்பியுள்ளதாம்!

## மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கு தெரிவிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட குடாநாட்டு மக்களுக்கு 15 மில்லியன் ரூபா நிதியும், 15 லொறி களில் பொருட்களும் அனுப்பி வைக் கப்பட்டிருப்பதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகா ரிக்கு ஜனாதிபதியின் செயலர் தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தத்தால் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு, அர சின் உதவிகள் எவையும் கிடைக்க வில்லை என வெளியாகும் செய் தியை அடுத்து, யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி, சம்பந்தப் பட்ட உயர் அதிகாரிகளிடம் விசாரணை மேற்கொண்ட போதே ஜனாதிபதி யின்செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களுககு 15 மில்லியன் ரூபாவும், 15 லொறிகளில் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட ரீதியாக இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி யின் செயலர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இராணுவத்தினர் மீண்டும் காவலரண்களை புதுப் பித்து வருவதால், மக்கள் தமது பணிகளை மேற்கொள்ள, பொருட் களை மீட்க இடையூறாக இருப்ப தாகக் கரையோரப் பகுதி மக்கள் யாழ்.மனித உரிமை ஆணைக் குழு வில் முறைப்பாடு செய்துள்ளனர். இதையடுத்து, யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி யாழ். மாவடட இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, அவ்வாறு இராணுவத்தினர் செயற் படாது இருப்பதற்கு தான் நட வடிக்கை எடுப்பதாக உறுதியளித் ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோத மண் அகழ்வால் உவர்நீர் உட்புகும் அபாயம்

## கைதடி மக்கள் அச்சம்

(கைதடி)

கைதடி -நுணாவில் பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழப் படுவதால், இந்தப் பகுதி குடி மனைக்குள் கடல் ஏரியில் இருந்து நீர் உட்புகும் ஆபத்து உருவாகுவ தாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அஞ்சுகிசன்றனர்.

கைதடி, நுணாவில் பூதவராயர் கோயிலுக்கும்- மருதடி இராணுவ முகாமுக்கும், குச்சப்பிட்டி மயானத் துக்கும இடைப்பட்ட பகுதிகளி லேயே இவ்வாறு மணல் சட்ட விரோ தமாக அகழப்பட்டு வருகிறது.

உவர் நீர் தடுப்பணையின் பெரும் பகுதிகளிலும், கைதடி- நுணாவில் தரவைப்பகுதிகளிலும் மணல் அகழப்படுவதால் உவர் நீர் குடி மனைகளுக்குள் உட்புகும் அபா யம் ஏற்பட்டுள்ளது.

அகழப்படும் மணல் இரவு வேளை களில் சன நடமாட்டம் குறைந்த வேளையில் உழவு இயந்திரம் மூலம் ஏற்றபபட்டு, உழவு இயந்திர உரிமை யாளர்களின் காணிகளில் பறிக்கப் பட்டு, பின்னர் கூடிய விலைகளில் விற்கப்படுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# கிராம அலுவலர்கள் ஊடாக உதவிப் பொருட்களை வழங்கவும்

## வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர்

அண்மையில் வீசிய "சுனாமி" பேரழிவின் விளைவாக ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிவாரண உதவியளிக் கும் முகமாக, வலி.கிழக்கு பிரதேச செயலர் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி ஒரு செயலணிக்குழு வொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணிக்குழுவின் தீர்மானத்துக்கமைய சகல கிராம அலுவலர்களும் தங்களது பிரிவுக ளில் மக்களிடம் பொருள், நிதி உதவி என்பன சேகரிப்பதெனவும் இந்த நிதி, பொருட்கள் என்ப வற்றை அரசாங்க அதிபருடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோ கிப்பதெனவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய நிதி, பொருள் உதவி வழங்க விரும்பும் மக்கள், தங்கள் பிரிவு கிராம அலுவலரிடம் அவற்றைச் சமர்ப்பிக்குமாறும் வலி. கிழக்கு உதவிப் பிரதேசசெயலர் கேட்டுள்ளார்.

# சின்னஞ் சிறுசெய்திகள்

### ரணில் வருகிறார்!

(பருத்தித்துறை)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.குடாநாட்டில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட இடங்களைப் பார்வையிடுவ தற்காக யாழ்ப்பாணம் வருவுள்ள தாகத் தெரி விக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட ஐ.தே.க.யின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மகேஸ் வரன் இந்தத் தகவலை வெளி யிட்டார்.

### வலி.தென்மேற்கு பிரதேச சபையும் நிவாரண உதவி

இயற்கை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்காக நிவாரண உதவி வழங்குவதற்காக, வலி.தென் மேற்கு பிரதேசசபை உத்தியோ கத்தர்கள் நிதி சேகரித்து, பால்மா வகைகள், மருந்துப் பொருட்கள், பாய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை கடந்த புதன்கிழமை வடமராட்சி மக்களுக்கு வழங்கி யுள்ளனர். (48,44)

### தையல் பயிற்சி வகுப்பு ஒத்திவைப்பு

வடக்கு, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத் தின் அனுசரணையுடன் ஜே/114 கிராம அலுவலர் பிரிவில் ஆண்டு தோறும் நடைபெறும் தையல் பயிற்சியின் 2005ஆம் ஆண்டுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை ஆரம் பமாவதாக மாணவிகளுக்கு அறி விக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத் தால் பிற்போடப்பட்டுள்ளது என் றும், வகுப்புக்கள் ஆரம்பிக்கும் நாள் பின்னர் முறைப்படி அறிவிக் கப்படும் என்றும் நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (63)

### மா விநியோகம்

உணவு விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகளுக்குத் தேவையான கோதுமை மாவை முகவர்கள் ஊடாக யாழ்ப்பாணத்தில் விநியோ கிப்பதற்கான நடவடிக்கையை யாழ்.வணிகர் கழகம் மேற்கொண் டுள்ளது. கோதுமை மா தேவை யான உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் தமது எல்லைக்கு உட் பட்ட வர்த்தகர் சங்கங்களின் சிபாரி சுக் கடிதத்துடன் தம்முடன் தொடர்பு கொண்டு தேவையான மாவைப் பெற முடியும் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

### முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் இடம்பெயர்ந்தோர்

கடற்பெருக்கு ஏற்படலாம் என்று அறிவிக்கப்பட்டதனால் யாழ். குருநகர்-திருநகரைச் சேர்ந்த 20 குடும்பங்கள் இடம்பெயர்ந்து, திரு நெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் உலர் உணவு களை தொண்டர்கள் அயல் கிரா மங்களில் சேகரித்து வழங்கி வரு கின்றனர். (63)

# ஓய்வூதிய அதிகரிப்பு சுற்றுநிருபம் செயலகங்களுக்கு கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

வரவு- செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்ட ஓய்வூதிய அதி கரிப்பு சம்பந்தமான சுற்றுநிருபம் சகல பிரதேச செயலகங்களுக்கும் கிடைத்துள்ளது. இல 14/2004 கொண்ட இந்தச் சுற்றுநிருபத்தின் படி ஓய்வூதிய அதிகரிப்பு பின்வரு மாறு அமையவுள்ளது.

பத்து வருடங்களுக்கு மேற்பட்ட ஓய்வூதியர்களுக்கு அவர்களது அடிப்படை ஓய்வூதியத்தின் 15 வீதம் அதிகரிக்கிறது. 10 வருடத் துக்கு குறைந்தவர்களுக்கு அவர் கள் 10 வருடத்தின் பின்பெறும் ஓய்வூதியத்தின் 15வீதம் அதிகரிக் கப்படும். இந்த அதிகரிப்பு 750 ரூபா வுக்குக் குறைவானதெனின் 750 ரூபா அதிகரிக்கப்படும். அத்தோடு முன்பு வழங்கப்பட்டுவந்த படிகள் அனைத்தும் தொடர்ந்தும் வழங் கப்படும்.

தென்மராட்சிப் பிரதேச செயல கத்தால் இந்த அதிகரிப்பு ஓய்வூதி யக் கணிப்பு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும், ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் டிசம்பர் மாத நிலுவையும் சேர்த்து வழங்கப்படும் எனவும் ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

### இரத்த பரிசோதனை உபகரணங்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு ஐ.ஓ.ஏ.தொண்டர் நிறு வனத்தினால், சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரத்தப் பரி சோதனை உபகரணங்கள் மாவட்ட வைத்தியசாலை அதிகாரி க.அம்பி கைபாகனிடம் அண்மையில் கைய ளிக்கப்பட்டன. (29)

### உழவு இயந்திர சாரதி மயக்கமுற்று மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிக் கொண் டிருந்த உழவு இயந்திரச் சாரதி, மயக்கமுற்று விழுந்து உடன் மர ணமான சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

இதில் கைதடி - நாவறகுழியைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத் துரை (வயது 54) என்பவரே மரண மானவராவார். (29)

### யாழ்.இந்து மகளிர் கல்லூரியினரும் நிவாரணப் பணி

(சுதுமலை)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியினரால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள் ளன.

கலாவாணி சனசமூக நிலையத் துக்குட்பட்ட 242 குடும்பங்களுக்கு மருத்துவப் பொருட்கள், உடு துணி கள், பால்மா வகைகள் என ஒரு தொகுதிப் பொருட்கள் வழங்கப் பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் தெரிவித்தார். (91)

### புனித சாள்ஸ் மாணவர்களுக்கு

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தி யாலயத்தில் கல்வி கற்கும் மேற் பிரிவு மாணவர்கள் அனைவரை யும் தற்போது ஏற்பட்டுள்ள சூழ் நிலையில் ஆற்ற வேண்டிய கடமை கள் தொடர்பாகவும், பாடசா லையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக் கைகள் தொடர்பாகவும் ஆராய்வ தற்காக நாளை காலை 9 மணிக்கு வித்தியாலயத்துக்கு சமூகம் கொடுக்குமாறு வித்தியாலய அதிபர் எம்.ஞானப் பிரகாசம் தெரி வித்துள்ளார். (58)

### யாழ்.இந்துவின் நிவாரணப் பணி பூர்த்தி

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் யாழ்.இந்துக் கல்லூரியி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உதவிப் பொருட்கள் சேகரிக் கும்பணி நேற்றுடன் முடிவடைந் துள்ளது.

சேகரிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், சேக ரிக்கப் பட்ட ஏனைய பொருட்களும் உரிய முறையில் முல்லைத்தீவில் ஒப் படைக்கப்பட்டுள்ளன. இது தொடர் பான கணக்கு அறிக்கையைப் பாடசாலையில பார்வையிடலாம் எனவும் கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : க.சுஜானி
முகவரி : மல்லாகம்



வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# சங்கானைப் பகுதியில் நிவாரண சேகரிப்பு

(சங்கானை)

சங்கானைப் பகுதியில் நிவாரண பல்வேறுபட்ட அமைப்புக்களாலும், உதவி நிவாரணப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட் கள் வலி.மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளரூடாகத் தேவைப்படும் பகுதிகளுக்கு அனுப்புவதற்காகக் கையளிக்கப்பட்டு வருகிறது.

சங்கானை அரசடி வீதியைச் சேர்ந்த செல்வரத்தினம் இராச லிங்கம் என்பவர் தனிப்பட்ட ரீதி யில் இரண்டு லட்சம் ரூபாவுக்குரிய நிவாரணப் பொருட்களை முல் லைத்தீவு மக்களுக்காக வழங்கும் நோக்குடன் 200 பாய்கள் உட்பட பால்மா வகைகள், சாப்பாட்டுக் கோப்பைகள், எவர்சில்வர் குவளை கள், மருந்து வகைகள் போன்ற வற்றை அங்கு எடுத்துச் சென்றுள் ளார்.

இதேபோன்று தனிப்பட்ட நபர் கள் பலரும் முல்லைத்தீவில் பாதிக் கப்பட்ட மக்களுக்காக அத்தியா வசிய நிவாரணப் பொருட்களை அங்கு கொண்டு செல்கின்றனர். (48)

## கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு

# வைத்தியசாலையில் தங்கியிருப்போருக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் உதவி!

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு யாழ்.பல்கலைக் கழக சமூகம் நேரடியாக அத்தியா வசிய மருந்துப் பொருட்களை வழங்கி வருகிறது.

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு படுக்கை விரிப்புகள், புடவைகள், பாதணிகள் என்பன பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கி வருகின்றனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட நோயாளர்களில் இயற்கை யின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கும் இவர்கள் நேரடியாகச் சென்று உதவிப் பொருட்களைக் கையளித்து வருகின்றனர்.

இவற்றுடன் யாழ்.பல்கலைக் கழக சமூகத்தின் ஏற்பாட்டில் பல் கலைக்கழக மாணவர்களால் பொலி கண்டி அமெரிக்கன் மிஷன் பாட சாலைகளில் தங்கியுள்ள 17 குடும் பங்களுக்கும், பாலாவி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள 235 குடும்பங்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங் கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள பாதிக் கப்பட்டவர்களுக்கும் பாதணிகள், படுக்கை விரிப்புகள், புடவைகள் என்பன வழங்கப்பட்டன. (91)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# யாழ்.கட்டளைத் தளபதியால் உதவிப் பொருட்கள் கையளிப்பு

சுனாமி கடற்கொந்தளிப்பில் சிக்கிப் பாதிக்கப்படடு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள நோயாளர்களுக்கென யாழ. மாவட்டக் கட்டளைத் தளபதி ஒரு தொகுதி உதவிப்பொருட்களை வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கடந்த வியாழக்கிழமை கையளித் தார்.

இதனையொட்டி வைத்திய சாலை வளாகத்தில் பெருமள வான ஆயுதம் தாங்கிய படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். இதே வேளை வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டுள்ளோருக்கு பலரும் உதவிப் பொருட்களை வழங்கி வருகின் றனர் எனத் தெரிவிக்கப்பட் டது. (111)

# விளையாட்டு அரங்கம்




## காசுடன்தான் நேசம்

சர்வதேச கிரிக்கெட் இன்று எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பது பலராலும் எழுப்பப்படும் ஒருகேள்வி. ஆனால் இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். முன்னொரு காலத்தில் கிரிக்கெட் வீரர்கள் ஆட்டத்தின் பெருமைக்காக விளையாடினார்கள். ஆனால் இன்றோ ஆட்டத்தின் மகத்துவம் என்பதெல்லாம் வெறும் பேச்சாய்ப் போய் விட்டது. அன்று கனவான்கள் விளையாட்டாக இருந்த கிரிக்கெட் இன்று பண ஆசைபிடித்தவர்களின் விளையாட்டாகிவிட்டது.

விளையாட்டின் மீதான வெறிபோய் இப்போது பண வெறி ஏற்பட்டுவிட்டது.

விளம்பரதாரர்களால் வாங்கப்படும் வீரர்கள் விளம்பர நிறுவனங்களின் தேவை கருதித் தமது தனியாள் திறமையையே வெளிக்காட்ட முனைகிறார்கள். இதனால் அணிக்காகவன்றித் தமது சுயநல நோக்கு சாதனைகள், தரவுகள் போன்றவைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இதைச் சில சர்வதேச கிரிக்கெட் வீரர்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கில்கிறிஸ்ட் இந்தியா வந்திருந்தபோது அவரை விளம்பர உலகம் சூழ்ந்துகொண்டமை தனக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது என்பதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் இப்படியான விளம்பர உலக அழுத்தங்கள் இந்திய வீரர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை என்கிறார் ஒரு விமர்சகர். ஏனெனில் இவர்கள் வர்த்தக விளம்பரங்களுடனேயே வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள்.

இன்னொருவகையில் கட்டுக்கடங்காத பணப்புழக்கம் தான் ஆட்ட நிர்ணய சர்ச்சைகளில் கிரிக்கெட் வீரர்களைக் கொண்டுபோய் விட்டு, அவர்களின் கிரிக்கெட் வாழ்க்கையையும் பாழாக்கிக் கனவான்கள் ஆட்டத்துக்கும் ஏன் அவர்களின் நாட்டுக்குக்கூட அபகீர்த்தியை ஏற்படுத்திவிடுகின்றது.



சச்சின் - ஷேவாக்
எம் வழி தனி வழி

தற்போது I.C.C எடுத்துள்ள பல நடவடிக்கைகள் கிரிக்கெட் ஆட்டத்தை மீண்டும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பாங்குதெரிகிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் கிரிக்கெட் வீரர்கள் மைதானத்தில் நடந்துகொள்ளும் முறைமை பற்றிய கடும் இறுக்கமும், அதன் தொடர்பில் பலர் முகம் சுளிப்பதும். இருந்தாலும் பண வைரஸ் வேறு விதத்தில் பரவி அமைப்புகளுக்குள் ஊடுருவி நிற்கிறது. இதன் காரணமாகப் பாரிய மைதானங்கள் அமைத்து விளம்பரங்கள் மூலம் பணம் உழைக்கும் நோக்கம் தெரிகிறதேயொழிய, கிரிக்கெட் ஆட்டத்தை அடிமட்டத்தில் இருந்து (GRASS ROOT LEVEL) வளர்த் தெடுக்கும் கடமையில் தவறிவிடுகிறார்கள். ஏனெனில் அங்கு பணம் பெருமளவில் புரளும் நிலை இல்லையல்லவா?

இன்னொருபுறம் தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் கிரிக்கெட் ஆட்டங்களை ஒரு போராகவே காட்ட முயற்சிக்கின்றன. ஆட்டங்கள் வீரர்களின் மத்தியிலான மைதானச் சண்டையாகவே காட்ட முற்படுகின்றன. டெஸ்ட் தொடர்களோ இரண்டு நாடுகளையே தொடர்பு படுத்துவதுபோலக் காட்டப்படுகின்றன. கிரிக்கெட்டில் வர்த்தகமயம் எல்லாத் துறைகளிலும் ஊடுருவிவிட் டது. ஆனால் நேரடியாகக் குற்றவாளிகளாகத் தென்படுபவர்கள் கிரிக்கெட் வீரர்களாக இருக்கிறார்கள். வீரர்கள் பல வித விளம்பரச் சின்னங்களை (LOGOS) அணிந்து கொண்டு வர்த்தக விளம்பரங்களாக வலம் வருகிறார்கள். இவர்கள் பாரிய நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் கூடுதல் மதிப்புக் கொடுக்கிறார்கள். அணி முகாமைத்துவத்துக்குக் கொடுக்கும் மரியாதையை விட. ஏனெனில் செக் புத்தகங்களில் கையெழுத்திடுபவர்கள் முன் கூறப்பட்டவர்கள்.


என்னதான் இத்தகைய பணப் பசாசின் கைகளில் கிரிக்கெட் சிக்கிக்கொண்டாலும், இன்னும் அதன் மெருகு குறைந்துவிடவில்லை. அதனுடைய கரு மையம் இன்னமும் அழிந்துவிடவில்லை. ஏனெனில் இதைக் காப்பாற்ற நிறைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கிரிக்கெட் உலகில் சுழற்சி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பிரட்மன், ஹொப்ஸ், சோபர்ஸ் போன்ற மகத்தானவர்களின் காலம் முடிந்துவிட்டது. அதைத் தொடர்ந்து சச்சின், லாறா, முரளி, வோன் போன்றவர்களும் அந்தளவு கீர்த்தி பெற்றவர்கள் தான். ஆனால் வேறு பரிமாணத்தில். ஒரே மேடையில்தான் எல்லோரும் தொடர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வித்தியாசம், வித்தியாசமாகக் காலம் ஓடிக்கொண்டே இருக்கத் தான் போகிறது. இன்று எத்தனைவிதமான கவசங்களுடன் வீரர்கள் மைதானத்தில் இறங்குகிறார்கள். எனவே மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. என்றாலும் வேறு சில விடயங்களும் தவிர்க்கமுடியாதவை போலத்தான் இருக்கின்றன. கிரிக்கெட் வீரர்களும் அதீத திறமையை, கிரிக்கெட்டின் மகத்துவத்தை விட்டுக்கொடுக்கப் போவதில்லை. இது சார்ந்த "பணத்தோட்டத்தைப்" போலவே.

- நிர்மலன்.

## அவனின்றி அசையாது

ஒரு அணியின் வளர்ச்சிக்கு அடித்தளம் இடுபவர் அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது பங்களாதேஷ் அணி.

உலகின் தலைசிறந்த பயிற்றுவிப்பாளரும், இலங்கை அணி 96 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற வழிசமைத்தவருமான டேவ் வட்மோர் துணிந்து பங்களாதேஷ் அணியைப் பொறுப்பேற்ற போது, பங்களாதேஷ் அணியை வட்மோரால் பிரகாசிக்கச் செய்யமுடியுமா? என்ற கேள்வி கிரிக்கெட் ஆர்வலர்கள் மத்தியில் ஏற்பட்டது.


வட்மோர்
வணக்கம் ஐயா

அதற்கு காரணம் பங்களாதேஷ் தான் விளையாடிய போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக பெரும் பிரயத்தனம் எடுத்தும் முடியாத நிலையில் இருந்தது தான். ஏற்கனவே 99 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணியை வென்றமை உட்பட ஐந்து வெற்றிகளைப் பெற்றுக் கொண்ட பங்களாதேஷ் அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் பெற்றுக் கொண்ட வெற்றியே மகத்தான வெற்றியாகக் கருதப்படுகிறது.

முன்னைய வெற்றிகள் ஆங்காங்கே அதிஷ்டவசமாகப் பெற்றுக்கொண்டவையாகும். ஆனால் தமது 100 ஆவது போட்டியிலே தமது சொந்த நாட்டிலே இந்திய அணிக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட வெற்றியானது பங்களாதேஷ் அணியின் வளர்ச்சியில் ஒரு மைல்கல்லே ஆகும்.

இந்திய அணிக்கு எதிரான முதலாவது மற்றும் மூன்றாவது போட்டிகளில் பங்களாதேஷ் அணி தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் அவர்கள் இந்திய அணிக்குச் சவால் விடும் அணியாகவே களத்தில் விளங்கியுள்ளனர்.

அதுவும் உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரர்களான சச்சின், ராவிட், கங்கூலி முதலிய வீரர்களைக் கொண்ட இந்திய அணி முதலாவது போட்டியிலும் மயிரிழையிலே தான் தனது கௌரவத்தைத் தக்கவைத்துக் கொண்டது. பலம் வாய்ந்த இந்திய அணியால் வெறும் பதினொரு ஓட்டங்களால் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.


அப்தாப் அகமட்
புதிய சூரியன்

இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணி பெற்றுக் கொண்ட 229 ஓட்டங்களுக்குள் இந்திய அணியை கட்டுப்படுத்தி பங்களாதேஷ் அணி தனது சொந்த ரசிகர்கள் முன்னிலையில் பெற்றுக் கொண்ட வெற்றியானது அந்த அணியின் அற்புதமான பந்து வீச்சையும் மிகவும் உன்னதமான களத்தடுப்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

இதே நேரம் மூன்றாவது போட்டியில் பங்களாதேஷ் அணி 91 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவித் தொடரை இழந்தாலும், அந்த அணியின் சிறப்பான வளர்ச்சியும் பிரகாசமான எதிர்காலமும் இப்போட்டியில் வெளியாகி உள்ளது. குறிப்பாக பங்களாதேஷ் அணி வீரர்கள் இந்திய அணிப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை சிக்ஸர்களாகவும் பவுண்டரிகளாகவும் மாற்றி இந்திய அணிக்கு விடுத்த சவால் , பங்களாதேஷ் அணி எதிர்காலத்தில் பிரகாசிக்கும் என்பதையே தெளிவாக்குகின்றது.

குறிப்பாக பங்களாதேஷ் அணியின் ராஜின் சாலே, அஸ்ரபுல், மொர்ராசா, அப்தாப் அஹமத், மஸ்ரப் முர்தாஸா ஆகிய வீரர்களது துடுப்பாட்டத் திறமை வளர்ந்து வருவது பங்களாதேஷ் அணிக்கு பாரியதொரு வளர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஒட்டு மொத்தத்தில் தனது அனுபவத் திறமையால் பங்களாதேஷ் அணியைப் புடம்போட்டு விட்டார் வட்மோர். அவனின்றி பங்களாதேஷ் அணியில்லை.


- லெஸ்லி.

## இந்தத் தடவையும் உங்களை வேண்டுகின்றோம்

அனுபவ முதிர்ச்சியும் சர்வதேச புகழும் கொண்ட இரண்டு இலங்கைத் தடகள வீராங்கனைகள் என்றால் அவர்கள் சுசந்திகா ஜயசிங்கவும், தமயந்தி தர்ஷாவும் தான். தர்ஷாவின் விருப்பத்துக்குரிய நிகழ்வாக இதுவரை இருந்து வந்தது 400 மீற்றர் ஓட்டமாகும். ஆசிய தடகளப் போட்டிகளில் இரண்டு தடவை 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர் தர்ஷா. இதே வேளை இவரது துணை நிகழ்வாக இதுவரை இருந்தது 200 மீற்றர் ஓட்டமாகும். 1998 இல் பாங்கொக் நகரில் நடைபெற்ற ஆசிய தடகளப் போட்டிகளில் 22.48 செக்கன்களில் 200 மீற்றர் தூரத்தை ஓடிக்கடந்தவர் தர்ஷா.

மேலும் சுசந்திகாவின் முன்னுரிமை நிகழ்வு 200 மீற்றர் ஓட்டம். இந்த நிகழ்வில் தான் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 22.28 செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கம் வென்றவர் இவர். எனவே சர்வதேசப் போட்டிகள் என்றால்200 மீற்றர் ஓட்டம் சுசந்திகாவுக்கென்றே இருந்தது.

இப்போது புதிய செய்தியொன்று பேசப்படுகின்றது. அதாவது இனிவரும் காலங்களில் தமயந்தி தர்ஷா தனது முதன்மை நிகழ்வாக 200 மீற்றர் ஓட்டத்தைத் தெரிந்து கொண்டுள்ளார். அடுத்த வருடம் நடைபெறப்போகும் சர்வதேசப் போட்டிகளில் தர்ஷாவையே 200 மீற்றர் களத்தில் காண முடியும் என்றே நம்பப்படுகிறது. இரண்டு மங்கையருமே முன்னதாக தமது உபாதையைக் காரணம் காட்டி பங்கு கொள்ளாமல் விட்டவர்கள். தொடர்ந்தும் காயங்கள் உபாதைக்கு உள்ளான நிலையில் இருப்பதாலேயே ஓட்ட தூரத்தைக் குறைத்துக் கொள்ளுமுகமாக 200 மீற்றர் நிகழ்வுக்கு மாறுகிறேன் என்கிறார் தர்ஷா. தற்போது உள்ள நிலையில் எனது ENDRANCE ஆனது குறுந்தூர ஓட்டத்துக்கே பொருத்தமாக இருக்கும் என்றும் தான் நம்புவதாக கூறுகிறார் அவர்.


சுசந்திகா
ஜாக்கிரதை அம்மணி

இந்த நிலையில் சுசந்திகாவைப் பின்தள்ளி தர்ஷா 200 மீற்றர் ஓட்டத்தில் சர்வதேச ரீதியாக இலங்கையின் சார்பில் கலந்து கொள்ள வேண்டுமாயின் தன் வேகத் தகைமையை நிரூபித்தாக வேண்டும். 2005 இல் நடைபெறப்போகும் தடகளப் போட்டிகளில் நான்கு தடகளப் போட்டிகள் மிகுந்த உயர்தரம் வாய்ந்தவை. ஒன்று ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெற இருக்கும் ஆசிய கிரோண் பிரி தடகளப் போட்டிகள் அடுத்து பின்லாந்தில் நடைபெற இருக்கும் உலக சம்பியன் ஷிப் போட்டிகள் பின்னர் தென்னாசிய தடகளப்போட்டிகள் அதன்பின் ஆசிய தடகளப்போட்டிகள் தென்கொரியாவில் நடைபெறவுள்ளன.

இப்பொழுது தர்ஷாவின் அறிவிப்பு சில வகைகளில் இலங்கைத் தடகள வளர்ச்சிக்கு உதவியாக இருக்கப் போகிறது. ஏனெனில் ஏதென்சில் போய் இறங்கி நின்று கொண்டு உபாதையைக் காரணம் காட்டி ஓட மறுத்தவர் சுசந்திகா. தர்ஷா சரியான போட்டியைக் கொடுப்பார் என்ற அச்சத்தில் இனிமேல் SERIOUS ஆக எடுத்து விளையாடுவார் அவர் என்று எதிர்பார்க்கலாம். அதே போல தர்ஷாவும் அந்தளவு கனதியான சிந்தனையுடனேயே களத்தில் இறங்க வேண்டியிருக்கும்.

இங்கு ஒரு முக்கியமான விடயம் எடுத்துக் காட்டப்படவேண்டும். அதாவது இப்படியான போட்டிகளுக்குச் செலவழிக்கப்படும் பணத்தில் மிகப் பெருந்தொகையைப் பொறுத்துக் கொள்பவர்கள் பொதுமக்கள்தான். எனவே சர்வதேச பிராந்தியப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் நாட்டுமக்கள் தங்களிடம் உச்சத் திறமையைத்தான் எதிர்பார்ப்பார்கள். அதோடு கணக்குக் கேட்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியில்லா விட்டால் தகுதியுடன் தங்களுக்கு ஒளி தெரியும் காலம் எப்போது வரும் என்று எதிர்பார்த்திருக்கும் அடுத்தடுத்துள்ள தடகள வீரர்களுக்கு இடம்கொடுத்து ஒதுங்கிக் கொள்ளவேண்டும். 'நாடுகாண்' பயணங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின் தமது சொந்தப் பணத்தில் அதைச் செய்து கொள்வது பற்றி யாரும் எதுவும் பேசப் போவதேயில்லை. எனவே ரசிகர்களை ஏமாளிகளாக்காமல் எல்லோரும் நடந்து கொண்டால் சரி.

- செந்தூரன்.

# உனக்கு மட்டும் வெளிச்சம்



இன்ஸமாம்
இப்பிடிப் பண்ணிட்டீங்களே

அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே மெல்பேர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு தலைமை தாங்கியவர் உபதலைவர் யூசுப் யுஹானா. தனக்கு முதுகுவலி பயங்கரமாக உள்ளதெனவும் மூன்று வாரம் ஓய்வு எடுக்கும்படி டாக்டர்கள் ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் கூறி இந்தப் போட்டியில் விளையாடாமல் ஒதுங்கிக் கொண்டார் இன்ஸமாம். இதில்தான் இப்போது சந்தேகம் கிளம்பியுள்ளது.

வழமையாக அணிநிர்வாகத்தினரோ அல்லது உடலியக்க நிபுணரோதான் வீரர்களின் காயம்பற்றி ஆராய்ந்து முதலில் அறிவிப்பார்கள். ஆனால் இன்ஸமாம் விடயத்தில் இவ்விரண்டுமே மௌனம் காத்து நிற்க இவரேதான் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பேர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்டில் முதல் இனிங்ஸிலும் இரண்டாவது இனிங்ஸிலும் முறையே 179, 72 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து பாகிஸ்தான் அணி படுதோல்வியைச் சந்தித்திருந்தது. இதில் அணித்தலைவர் இன்ஸமாம் பெற்ற ஓட்டங்கள் 1, 0. இதனால் கொதிப்படைந்த ரசிகர்கள் கராச்சி நகரில் இன்ஸமாம், யுஹானா ஆகியோர்களின் கொடும்பாவிகளைக் கொளுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அந்தக் கோபத்தில்தான் இந்தப் போட்டியில் இன்ஸமாம் பங்குபற்றவில்லையென சில ஊடகங்கள் அரசல் புரசலாக தகவல் வெளியிட்டுள்ளன.

இதில் எந்தளவுக்கு உண்மை இருக்கும் என்பது நாளடைவில் தெரியவந்தாலும் இதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொண்டு ஒரு தேசிய அணியின் தலைவர் அணியொரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது ஒதுங்கிக்கொண்டது சரியென்று தோன்றவில்லை. இப்போதுள்ள பாகிஸ்தான் அணியில் சிரேஸ்ட வீரர்களாக இருப்பதே இன்ஸமாமும் யுஹானாவும்தான். இவரும் ஒதுங்கிக் கொண்டால் அணியில் இளம் வீரர்களுக்கு உற்சாகமூட்டுவது யார்? வழிகாட்டுவது யார்?

பொதுவாகவே இந்திய, பாகிஸ்தான் ரசிகர்கள் கிரிக்கெட்டில் தீவிரப்போக்கை கடைப்பிடிப்பவர்கள். அவர்கள்- வென்றால் வீரர்களுக்கு கோபுரம் கட்டுவதும் தோற்றால் குழிதோண்டிப் புதைப்பதும் ஒன்றும் புதிதான விடயமல்ல.

ஆசிய நாட்டு கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரண விடயம்.



அக்தர்
என்ன செய்வீனம் என்று பாப்பம்

இவ்வாறானதொரு சூழ்நிலையில் முதல் டெஸ்டில் பிரகாசிக்கத் தவறிய யுஹானா இந்தச் சம்பவத்தைச் சவாலாக எடுத்து இந்தப் போட்டியில் தலைமைப் பதவியின் கனத்தோடு விளையாடி சதமடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மையாகவே முதுகுவலி காரணமாக இன்ஸமாம் பாதிக்கப்பட்டிருப்பாராயின் இன்று தொடங்கும் மூன்றாவது டெஸ் டிலும் அவர் பங்கேற்கமாட்டார். ஏனென் றால் வைத்தியர்கள் மூன்று வாரங்கள் ஓய்வெடுக்கும்படி கூறியுள்ளதால். மாறாக இன்றைய போட்டியில் விளையாடுவாராயின் அது ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை அனுசரிப்பதாகவே அமையும்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இன்ஸமாம் மீது என்ன நடவடிக்கை எடுக்கும்?

ஏனென்றால் சென்றவருடம் இந்திய அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது.

தொடரை நிர்ணயிக்கும் ராவல்பிண்டியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் அக்தர் காயம் காரணமாக ஆடவில்லை. ஆனால் நான்காம் நாள் ஆட்டத்தின்போது அக்தர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச இயலாத போது அதிரடியாக ஆடி எப்படி அவரால் ஓட்டங்களைக்குவிக்க முடியும் என்று அப்போது சர்ச்சை எழுந்தது.

அக்தர் காயமடையாமலே ஏமாற்றி வெளியேறினார் என்று இன்ஸமாம் குற்றஞ்சாட்டியிருந்தார். இதனால் அக்தருக்கு ஏற்பட்ட காயம் லேசானதா அல்லது மோசமானதா எனக் கண்டறியும் நோக்கிலும், இந்தப் போட்டியில் காயம் காரணமாக விளையாடாமல் இருந்த உமர் குல், அப்துல் ரசாக், மொயின்கான், சபீர் அகமட் ஆகியோர்களுக்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டதா என அறிவதற்கும் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை 4 பேர் கொண்ட மருத்துவக் குழுவை நியமித்திருந்தது.

அதன்படி மருத்துவக் குழுவின் இறுதி அறிக்கையில் - அக்தர் தொடர்ந்து பந்துவீசியதாலேயே காயம் ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னரே இந்த விசாரணை முடிவுக்கு வந்தது.

அக்தர் தனக்கு கைவிரலில் மட்டுமன்றி முதுகுப் பகுதியிலும் காயம் ஏற்பட்டதால்தான் பந்துவீசவில்லை எனவும், வேண்டுமென்றே ஆட்டத்தைப் புறக்கணிக்கவில்லை என்று கூறியும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அக்தர்மீது விசாரணை என்ற பெயரில் அநாகரிகமாக நடந்துகொண்டது.

இன்ஸமாமின் காயமும் இதுவரை ஊர்ஜிதப்படுத்தப்படாத நிலையில், இன்ஸமாம் அக்தர் மீது குற்றஞ் சாட்டியதைப் போன்று இன்று அணியின் ஏனைய வீரர்கள் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினால் அக்தர் மீது மேற்கொண்ட நடவடிக்கை போன்று பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அவர்மீதும் பாரபட்சமின்றி மேற்கொள்ளுமா? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

—விமலன்.

# எழுக வீரனே எழுக



றொனால்டின் ஹோ
கோபுரத்தின் உச்சியில்

பிரேசில் நாட்டவரும் ஸ்பானிய நாட்டின் பார்சலோனா கழகத்தின் அங்கத்த வருமான றொனால்டின் ஹோ 2004 ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் என்ற FIFA விருதைப் பெற்றுள்ளார். இவர் பெற்றுக் கொண்ட புள்ளிகள் 620. ஆர்சனல் கழக வீரரும் பிரான்ஸ் நாட்டவருமான தியரி ஹென்றி 552 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொள்ள, இவ்வருட ஐரோப்பாவின் சிறந்த உதைபந்தாட்ட வீரர் பட்டத்தைத் தட்டிக்கொண்ட AC மிலான் கழகத்தைச் சார்ந்தவரும் உக்ரையின் நாட்டைச் சேர்ந்தவருமான அன்ரீ ஷெவ் ஷென்கோ 253 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இந்தப் பெருமையை நான் பார்சலோனா கழகத்துக்கு நன்றியுடன் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் இல்லாவிட்டால் இந்தப் பெருமை எனக்கு கிடைத்திருக்காது என்கிறார் றொனால்டின்ஹோ. சில வேளை செல்சி கழகத்துக்கு இவர் மாறக்கூடும் என்று முன்னதாக வந்த செய்திகளை இவர் மறுத்திருக்கிறார். நான் தொடர்ந் தும் பார்சலோனா கழகத்திலேயே இருப்பேன் என்கிறார்.

2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் விளையாடிய இவர் பிரேசில் நாட்டின் ஜாம்பவான் பீலேயினால் அப்போட்டிகளின் அதிசிறந்த வீரர் என்று சுட்டிக்காட்டப்பட்டவர். 2002 ஆம் ஆண்டின் பிரேசிலின் இறுதியாட்ட வெற்றிக்குக் காரணமாக அமைந்தவர்கள் மூன்று 'R' கள். றொனால்டோ, றிவால்டோ இருவருடனும் மூன்றாமவர் றொனால்டின் ஹோ ஐந்தாவது முறையாக உலகக் கிண்ணத்தை பிரேசில் 2002 இல் வென்றமைக்கு இவரது அபாரத் திறமையும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

FIFA இன் உலகின் அதிசிறந்த உதைபந்தாட்ட வீரர் தெரிவு நூற்று ஐம்பத்தேழு சர்வதேசப் பயிற்றுனர்கள் மற்றும் 145 நாடுகளின் தேசிய அணித் தலைவர்களின் வாக்கெடுப்பு முறையொன்றின் மூலமே நடைபெற்றுள்ளது. போட்டியாளர்கள் தெரிவு முறையில் முதலிடத்துக்கு ஐந்து புள்ளிகளும் இரண்டாம் இடம்பெறும் போது மூன்று புள்ளிகளும், மூன்றாவது இடத்துக்கு ஒரு புள்ளியும் என்ற வகையில் புள்ளியிடல் நடைபெற்றுள்ளது.

இம்முறை இரண்டாம் இடம்பெற்ற பிரான்சின் தியரி ஹென்றி கடந்த முறையும் இரண்டாம் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் FIFA விருது பெற்றவர் ஒய்வு பெற்ற வரும் பிரான்சிய நாட்டுத் தேசிய அணியின் முன்னாள் தலைவருமான ஸினேடின் ஸிடானே நான்காவது இடத்தைப் பிடித்தார். 2003 ஆம் ஆண்டின் ஐரோப்பிய சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருது பெற்ற செக் நாட்டின் பாவெல் நெட்வெட் ஐந்தாம் இடம் பெற்றுக்கொண்டார்

1991 இல் அறிமுகப்படுத்தப்பட்ட FIFA உலகின் அதிசிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதைப் பெறும் நான்காவது பிரேசில் நாட்டவராக றொனால் டின்ஹோ திகழ்கின்றார். முன்னதாக 1994 இல் றொமாரியோ, 1996, 1997, 2002 இல் றொனால்டோ, 1999 இல் றிவால்டோ ஆகியோர் இவ் விருதை வென்றவர்களாவர். அதிலும் சுவாரஸ்யமான ஒரு தகவல் 1997, 2002 இல் றொனால்டோ இன்ரர் மிலான் கழகத்துக்கு விளையாடும் போது இவ்விருதைப் பெற்றதைத் தவிர்த்துப்பார்த்தால் ஏனைய அத்தனை சந்தர்ப்பங்களும் பார்சலோனா கழகத்துக்காக விளையாடும் போதே பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

இவ்விருதைப் பெற்றுக் கொண்ட பின் கருத்துக் கூறும் போது றொனால்டின் ஹோ தான் விளையாட்டுத் துறையில் காணப்படும் இனவாதத்துக்கு எதிராகப் போராடப் போகின்றேன் என்று கூறியிருக்கிறார். பணம் பண்ணும் இயந்திரங்களாக இவர்களைப் பாவிக்கும் வெள்ளை இன நாடுகள் மனதின் அடி ஆழத்தை அருவருக்கத்தக்க இனவாதச் சிந்தனைகளின் விளை நிலமாக இருப்பது இவரது மனதைப் புண்படுத்தியிருப்பது தெரிகிறது. நான் இதுவரையும் இத்தகைய துன்பத்துக்கு உள்ளாகவில்லை என்றாலும், துன்பப்பட்டவர்களின் வேதனையைக் கண்டுள்ளேன். தொண்ணூறு நிமிட விளையாட்டை யாரும் களங்கப்படுத்த விடக்கூடாது. இந்த விடயத்தில் மிகக் கடுமையாக இருக்க நான் தீர்மானித்துள்ளேன் என்கிறார் அவர். பிறந்த புதுவருடம் றொனால்டின்ஹோவுக்கு அட்டகாசமாகத் தான் இருந்திருக்கும்.

— ஜோஸப் கிருஸ்ணா.

விளையாட்டு அரங்கம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# வவுனியா மாவட்டத்தில் துக்கதினம் அனுஷ்டிப்பு

(வவுனியா)

கடல் அனர்த்தம் காரணமாகப் பலியான அனைத்து மக்களுக்கும் வவுனியாவில் நேற்று முன்தினம் பத்து நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சகல இந்து - கத்தோலிக்க ஆலயங்கள், விகாரைகள், பள்ளி வாசல்களிலும் விசேட மௌனப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப பட்ட அதேநேரத்தில் நண்பகல் 12 மணிமுதல் 12.10 மணிவரை சகல சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

வாகனங்கள் கூட அந்தந்த இடங்களிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

வவுனியா நகரமே ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. மூவின மக்களுமே தங்களுடைய உணர்வுகளை கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலுத்தினர்.

இராணுவத்தினரும் அமைதியைப் பேணினர்.

அகதி முகாம்களில் வாழும் மக்களும், நாளாந்த கூலித் தொழில் செய்பவர்கள். அரச அலுவலகங்களில் கடமைபுரிவோர். வர்த்தகர்கள், பயணிகள் அத்துடன் இல்லங்களில் வசித்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் இடங்களில் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

சில வர்த்தக நிலையங்களிலும், வீடுகளிலும், இந்து ஆலயங்களிலும் சுட்டி விளக்கில் தீபங்கள் ஏற்றப்பட்டு, அஞ்சலி செலுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரத்தில் வவுனியா நகரத்தில் கறுப்பு - வெள்ளைக் கொடிகள் வர்த்தக நிலையங்களிலும், அரச அலுவலகங்களிலும், வாகனங்களிலும் கட்டப்பட்டிருந்தன.

# தென்னிலங்கையிலிருந்து நிவாரணப்பொருட்கள் 18 லொறிகளில் வன்னியை வந்தடைந்தன

(கிளிநொச்சி)

நேற்றுப் புத்தாண்டு தினமாக இருந்த போதிலும், தென்னிலங்கையிலிருந்து ஓமந்தை சோதனைச் சாவடி வழியாக, வன்னிக்கு நிவாரணப் பொருட்கள் லொறிகள் மூலம் எடுத்துவரப்பட்டன.

உடப்பு மக்களினால் சேகரிக்கப்பட்ட சுமார் ரூபா 40 லட்சம் பெறுமதியான மருந்துப் பொருட்கள், உடுபுடவைகள், கிடுகு, குடிநீர்த் தாங்கிகள், தேங்காய், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் என்பன அடங்கிய 18 லொறிகள் நேற்று வன்னிக்கு வந்தன.

முன்னாள் ஆராய்ச்சிகட்டு பிரதேசசபைத் தலைவர் கே. தட்சணாமூர்த்தி தலைமையில் வந்த இந்த குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் வசிக்கும் மக்களுக்கு நேரடியாகவே விநியோகம் செய்யவுள்ளதாக, வட மேல் மாகாண பிரதேச சபையின் உறுப்பினர் வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் எங்களுடைய சகோதரர்கள். அவர்களுக்கு இந்தத் தருணத்தில் உதவுவது எங்களது மனதாபிமான கடமை. அதற்காகவே உடப்பிலிருந்து பொருட்களைச் சேகரித்துக் கொண்டு வன்னிக்குச் செல்கிறோம் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் ஒரு தொகுதிப் பொருட்களை நேற்று வன்னிக்கு லொறி மூலம் அனுப்பி வைத்துள்ளது.

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் பார்வையிட்டனர்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட்டுள்ளதுடன், அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளையும் செய்துவருகிறது.

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு பூநகரி, பளை, புலோப்பளை, மாசார், கோவில்பற்று ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு, இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சித் தொண்டர்கள் நேரடியாகச் சென்று அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து வருகின்றனர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலத்தின் அதிகாரி பார்வையிட்டுச் சென்றுள்ளதுடன், இது தொடர்பான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் இடம் பெற்ற வெள்ளப் பெருக்கால் பாதிப்படைந்த சாந்தபுரம், இரணைமடு ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்ற 350 குடும்பங்களுக்கான, தரைப்பாய், சாரம், படுக்கைவிரிப்பு, வாளி, உடுபுடவை, அலுமினியப் பாத்திரங்கள் போன்ற பொருட்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக வட்டக்கச்சி, மாயவனூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கிக்கொண்டிருந்தபோது, கடற்கொந்தளிப்பு இடம் பெற்றால் இந்த நடவடிக்கையை நிறுத்தி, இந்த உதவிகளை கடற்கொந்தளிப்பால் பாதிப்படைந்த மக்களுக்கு வழங்குவதாக இலங்கைச் செஞ்சிலுவைச சங்க நிறுவன கிளிநொர்ச்சி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

### சோகம் தழுவிய நிலையில் புத்தாண்டு

மனத்தில் சோகம் தழுவிய நிலையில் கண்ணீர் மல்க புத்தாண்டுப் பிரார்த்தனையில் மக்கள் பங்கு கொண்டார்கள். இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற சமய நிகழ்வில், பெருமளவு மக்கள் கலந்துகொண்டிருந்த போதிலும் அனைவரது முகங்களிலும் சோகம் காணப்பட்டது. எவருமே மகிழ்ச்சியுடன் காணப்படவில்லை.

கடல் அனர்த்தம் காரணமாக சுமார் 28 ஆயிரம் பேரைப் பலி கொண்ட இந்த நாட்டில் வடக்கு-கிழக்கில் குறைந்தது 15 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இந்தத் தருணத்தில் எங்களுக்குப் புத்தாண்டுக் கொண்டாட்டம் வேண்டாம் என 58 வயதுடைய அன்ரனி காளி முத்து தெரிவித்தார்.




# பளைப்பிரதேச நலன்புரிநிலையத்தில் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம்!

இயற்கையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள பளைப்பிரதேச நலன்புரி நிலையங்களில் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இந்த நலன்புரி நிலையங்களில் மருதங்கேணி பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த 11 ஆயிரத்து 80 பேர் தங்கியுள்ளனர். இந்த நலன்புரி நிலையத்தில் இடநெருக்கடி தோன்றியுள்ளது. இதனால் சுகாதாரத்தைப்பேண முடியாதுள்ளதால் - இதன்காரணமாக நலன்புரி நிலையங்களில் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.


இதேவேளை, நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த சிலர் வயிற்றோட்டநோய் காரணமாக மரு.தங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளைப்பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 11 ஆயிரத்து 80 பேரில் பளை மத்திய கல்லூரியில் 5 ஆயிரத்து 800 பேரும், புலோப்பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் 3 ஆயிரத்து 210 பேரும், சோரன பற்று கணேச வித்தியாலயத்தில் 420 பேரும், இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன். பாடசாலையில் 410 பேரும், மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 810 பேரும், கோவில் வயல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 430 பேரும் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(122)

# முல்லைத்தீவு மாவட்ட புனர்நிர்மாணத்திற்கு 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் தேவை

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(முல்லைத்தீவு)

கடல் கொந்தளிப்பின் காரணமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் புனர்நிர்மாணத்துக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் தேவைப்படும் என, மதிப்பீடுகள் தெரிவிப்பதாக நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கிளிநொச்சியில் சந்தித்த விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கடல் அனர்த்தம் காரணமாக வடக்கு - கிழக்கு கரையோரப் பிரதேசங்கள் பெரும் அழிவைச் சந்தித்துள்ளன. மீளவும் மக்களுடைய வாழ்க்கையைக் கட்டி எழுப்ப பெருமளவு நிதி தேவைப்படுகிறது. சாவதேச சமூகத்திடமிருந்து இதனை நாங்கள் பெறவேண்டியுள்ளது. எனவே தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழிவின் தன்மையை சர்வதேச சமூகத்துக்கு விளக்க, கூட்டமைப்பின் கடல் அனர்த்தம் இணைப்புச் செயலகம் கொழும்பில் திறக்கப்பட வேண்டியது அவசியம்.

அனுபவம் படைத்தவர்களைக் கொண்டு அழிவு பற்றிய மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் நிதியை நேரடியாக எமது பிரதேச புனர்நிர்மாணத்துக்குப் பெற கூட்டமைப்பு தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார். இந்தச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# உயிர் காக்கும் பணியில்

(கிளிநொச்சி)

இயற்கையின் கொடூரச் செயலால் தமது சொத்துக்களையும், சொந்தங்களையும் மட்டுமல்லாது, தம் உடலின் பாகங்களையும் இழந்து நிற்கும் எம் உறவுகளுக்குத் தேவையான இரத்தம் பெற்றுக்கொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. எனவே, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இரத்ததானம் செய்யவிரும்பும் அனைத்து நலன்விரும்பிகளுக்கும் - அவர்களுக்கான போக்குவரத்து உதவிகள் செய்து, அவர்களை வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துவந்து, இரத்ததானம் செய்யும் பணியில் வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பின் கீழ் பாதிக்கப்பட்ட மக்கள்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிப்படைந்து உயிர்தப்பிப் பிழைத்துள்ள மக்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணப் பணிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடி நெறிப்படுத்தலில், புனர்வாழ்வுக் கழகத்தினர் ஊடாக அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டுவருகிறது. அரசசார்பற்ற நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களுமே இந்த நிவாரணப் பணிக்கு உதவி வருகின்றன.

முதல் மூன்று நாட்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தமது நிதிமூலம், விடுதலைப் புலிகளின் நிதி வளங்களையுமே பயன்படுத்தி நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது வெளிமாவட்டங்களிலிருந்து உதவிகள் வந்தவண்ணமுள்ளன.

இந்தக் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாடசாலைகள், ஆலயங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேரும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 129 குடும்பங்களைச் சேர்ந்த 459 பேரும், தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 185 பேரும், பளை மத்திய கல்லூரியில் 1815 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 731 பேரும், இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 88 குடும்பங்களைச் சேர்ந்த 304 பேரும், சோரன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 812 பேரும், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, புலோப்பளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் புலோப்பளை அந்தோனியார் ஆலயம் போன்றவற்றில் 244 குடும்பங்களைச சேர்ந்த 1032 பேரும், கோவில்வயல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 57 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், தர்மகேணியில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 389 பேரும், பூநகரிப பிரதேசத்தில் 2 ஆயிரத்து 957 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 707 பேரும், முழங்காவில் பிரதேசத்தில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர.

### இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகரில் இயங்கிவந்த கரைச்சிப் பிரதேச சபை பொதுநூலகம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பிரதேச சபையின் தலைமை அலுவலக வளாகத்தில் இயங்கி வருகிறது என, கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் தெரிவித்தார்.



தென் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருட்களை கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம், மதகுருமார் கையளிக்கின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*
*திருக்குறள்*

## நமது நோக்கு

# வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் கயவர்கள்

'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்...' என்று தமிழில் பழமொழி ஒன்று இருப்பது தெரிந்ததே.

கிழக்குப்பகுதி மக்கள் படும் அவலம் இத்தன்மை வாய்ந்ததாகவே உள்ளது. சுனாமி கடல் கொந்தளிப்பின் தாக்கத்தால் ஏற்பட்ட பல்வேறுபட்ட இழப்புகள் மற்றும் பாதிப்புக்களால் அவர்கள் எதிர்கொள்ளநேர்ந்த துன்ப துயரங்களின் அழுத்தம் அவர்களை விரக்தியின் விளிம்புக்கே கொண்டுசென்றுள்ள நிலையில், நிராதரவாகத் தவிக்கும் அவர்களை நேற்றுமுன்தினம் அதிகாலையில் இருந்து பொழியும் பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளம் மேலும் பாதிப்பிற்குள்ளாக்கிவருகிறது.

இந்த அடைமழை காரணமாக கிழக்குப்பகுதி பல்வேறு தொடர்பற்ற தனித்தனித் தீவுகள் போன்று வெள்ளத்தால் துண்டாடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மட்டக்களப்பிலுள்ள ஏறாவூர், கிரான், மீராவோடை, வாகரை, பொத்துவில், வந்தாறுமூலை போன்ற பல இடங்களுக்கான போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தநிலையில் அந்தப் பகுதி மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் தடை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக இந்தப் பகுதிவாழ் மக்கள் பல்வேறு வகையான ஆபத்துகளை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் அறியவந்துள்ளது. நேற்று மழை ஓரளவு தணிந்திருந்தபோதிலும், கருமேகமூட்டம் இன்னமும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளதென்றே தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் அதிகமான நலன்புரி நிலையங்களுள் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் அறுபதாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தொடரும் மழை காரணமாக தங்குமிடவசதிகள் போதியளவின்றியும், சுகாதாரச் சீர்கேடு, தொற்றுநோய்ப் பாதிப்புக்காரணமாகவும் அவலங்களை மேலும் எதிர்கொள்ள வேண்டிய ஆபத்தை எதிர்கொண்டுள்ளனரென மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலும் இதேபோன்ற நெருக்கடிகளையே மக்கள் எதிர்கொண்டுவருவதாகவும், அங்கும் கடும்மழை காரணமாக ஏற்பட்டுள்ள பெருவெள்ளம் அங்கு ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பீதியூட்டிவருவதாகவும் கூறப்படுகிறது. கடற்கோளால் சுமார் பதினோராயிரம் மக்களை இழந்து தவிக்கும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு லட்சம் மக்கள் சுமார் 50 நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் மக்கள் படும் அவலம் சொல்லுந்தரமன்று இருக்கையில் 'தவிச்ச முயல் அடிக்கும்' மனோபாவம் கொண்ட மனித அநாகரிகப் பிறவிகளின் கீழ்த்தரமான செயற்பாடுகள் நொந்த மனங்களை மேலும் நோகச் செய்யும் நடவடிக்கையாக அதிகரித்து வருகின்றது.

மக்களின் அவலத்தையும் சூழலின் நெருக்கடியையும் பயன்படுத்தி வர்த்தக ரீதியில் கொள்ளைலாபம் அடிக்க முயலும் சில வர்த்தகர்கள் மனித உயிர்களின் துன்பத்தைப் பணமாக்க முயலும் கொடூரத்தை மேற்கொள்வதாக அறியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களையே தமக்கும், தமக்குத் தேவையான ஆட்களுக்குமாகச் சுருட்டிக் கொள்ளும் எத்தர்களும் பல்வேறு செயற்பாடுகளில் இறங்கி அயோக்கியத்தனம் புரிவதும் இனங்காணப்பட்டுள்ளது.

அம்பாறை - மட்டக்களப்பு - திருமலை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்கள் - தமிழ்ப் பகுதிகளில் அல்லற்படுவோருக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கும் முயற்சியில் பொலிஸ் - இராணுவம் மற்றும் சில கயவர் கும்பல்கள் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இவர்களில் அரசசார்பு பேரினவாத சக்திகள் இயங்குவதாகவும் ஊடகச் செய்திகள் கூறுகின்றன.


வடக்கு-கிழக்கு பகுதிகளில் சுனாமி கடல் கொந்தளிப்பாலும், வெள்ளப் பெருக்காலும் அடுத்தடுத்து பேரவலங்களைச் சந்தித்துவரும் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனத் தொடரணிகள் இடைநடுவே பாதுகாப்புப் படையினராலும், காடையர் கும்பலாலும், இனவாதக் கட்சிகளின் அடியாட்கும்பலாலும் வழிமறித்து வேறுபகுதிகளுக்குத் திசைதிருப்பிக் கொண்டுபோவதுடன் கொள்ளையடிக்கவும்படுவதால் சர்வதேச உதவி நிறுவனங்கள் மற்றும் மனிதநேயத் தொண்டர் அமைப்புகள் தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளமை மேற்குறிப்பிட்ட காட்டுமிராண்டிகளின் மனிதநேயமற்ற செயல்களை உறுதி செய்வதாகவுள்ளது.

இது இந்த நாட்டின் ஆட்சிப்பீடத்தினை அலங்கரிப்பவர்களுக்கே அவமானம்தரும் நிலையாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தையே, அது உரியவர்களைச் சென்றடையாமல் தடுக்கும் படைத்தரப்பினரைக் கொண்டுள்ள ஒரு நாடென இலங்கை அடையாளப்படுத்தப்படுவது ஒரு அரசுக்கு கௌரவம் தரும் ஒன்றல்ல...

பிறரின் அவலத்தைத் தமது சுயநலத்திற்காக பயன்படுத்துவதைவிடவும் கொடிய செயல் வேறெதுவும் இருக்கவேமுடியாது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நிர்க்கதியான குழந்தைகளுக்காக திரேசாக்கள் பிறக்கவேண்டுமா?

இயற்கை அனர்த்தத்தின்போது மனிதர்கள்தான் பெரிய தொகையில் மாண்டார்களே தவிர மிருகங்கள் மரணிக்கவில்லையென நான் இப்பத்தியில் முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

இதற்கு இப்படியொரு காரணம் இருப்பதாக ஒரு இளம்பெண் ஒரு நூலில் வெளியான கட்டுரையொன்றின் சில பகுதிகளை எடுத்துக்காட்டியிருக்கிறார். அதிலிருந்து ஒரு பகுதியை வாசக அன்பர்களுக்குத் தருகிறேன்.

நிலநடுக்கம் ஏற்படுவதை முன்னரே தெரிந்துகொள்ள முடியுமா?

முடியும். பூமியின் உட்பகுதி வெப்பக்குழம்பாகவே இருக்கிறது. இதன்மீது, பூமியின் மேற்பரப்பு உறைந்து இறுகி பாறையாக உள்ளது. பூமியின் எல்லா இடங்களிலும் இந்தப்பாறை, ஒரே பருமனாக இருப்பதுமில்லை. கூடவே அவை மெல்ல நகர்ந்தவண்ணம் இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று உரசும்போது நிலநடுக்கம் ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பாக, இந்த உரசல் தொடங்கியபோது, நடுக்கத்தின் அலையெண் 20 ஹெட்ஸுகளுக்கும் குறைவாக இருக்கும்.

இந்தக் குறைவான அலையெண் அதிர்வை நாம் உணரமுடியாது. ஆனால் நாய், பூனை, யானை முதலிய விலங்குகள் உணருகின்றன. அப்போது அவை அங்குமிங்கும் பரபரப்புடன் ஓடி, விந்தையாகச் செயற்படும்.

இந்தக் குறைந்த அலையெண் அதிர்வுகளை உணரக்கூடிய சிஸ்மிக் கருவிகளும் இப்போது கிடைக்கின்றன. இவ்வாறு அதிர்வை உணர்ந்த சிலமணி நேரங்களில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. இருப்பினும் இக்குறுகிய நேரத்தில் முன்னெச்சரிக்கை செய்யவோ, பெரிய அளவில் மக்களை இடம்பெயரச் செய்யவோ இயலாமற்போகிறது.

★ ★ ★

பிஞ்சுக் குழந்தைகளும் இந்த நிலஅதிர்வுகளை உணரும் சக்தியைப் பெற்றிருந்தால் எத்தனையாயிரம் பிஞ்சுகள் உயிர் தப்பியிருக்கும்? என்று நான் சொன்னேன்.

ஐயோ, இன்று தாய், தகப்பன், உறவினர் அனைவரையும் இழந்து நிர்க்கதியராய் நிற்கும் பிஞ்சுகள் பற்றி வெளிவரும் செய்திகளைப் பார்க்கும்போது இரத்தக் கண்ணீரல்லவா வடிக்கநேருகிறது என்று அந்தப் பெண் கண்கலங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அகதிமுகாம் ஒன்றில் ஒரு வயதுக்கும் குறைந்த நாற்பத்தெட்டுக் குழந்தைகள் பெற்றோரை இழந்து பாடசாலை மாணவர்களின் பராமரிப்பில் உயிர்வாழ்ந்துகொண்டிருப்பதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியொன்றில் செய்தி வெளிவந்திருந்தது.

இச்செய்தியை அனுப்பிய நிருபர் அந்தக் குழந்தைகள் வைக்கப்பட்டிருக்கும் முகாமின் பெயரைக் குறிப்பிட்டிருக்கலாம். அப்படித் தெரிவித்திருந்தால் ஏதாவது பயன் கிடைக்கக்கூடும். அந்த நிருபரின் செய்தியில் மேலும் சொல்லப்பட்டிருக்கும் செய்தி இது.

சுமார் இருநூறு மாணவர்கள் தங்கியிருக்கக்கூடிய ஒரு பாடசாலையில் 9000 அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த அகதி முகாமில் மட்டும் ஒரு வயதுக்கும் குறைந்த 48 குழந்தைகள் பெற்றோரை இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர்.

இம்முகாமில் கடும் இடநெருக்கடி நிலவுவதால் ஆறு பாய்களில் துணிவிரிக்கப்பட்டு 48 குழந்தைகளும் கிடத்தப்பட்டுள்ளன.

மலம், சிறுநீர் கழிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவற்றைச் சுத்தப்படுத்தி, உடை மாற்றுவதற்கோ துணிகள் இல்லை. அசுத்தமான சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ள இக்குழந்தைகள் தொடர்ந்து அழுதவண்ணமிருக்கின்றன.

இந்த அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த, அல்லது பெற்றோர் காணாமற்போன குழந்தைகள் நூற்றுக் கணக்கில் வீதிகளில் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக இருப்பதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

உள்நாட்டிலும், உலக நாடுகளிலும் அகதிகளுக்கு உதவுவதற்குத் தாராள மனது படைத்தவர்கள் உதவியளித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து கிடக்கும் நிவாரண உதவிப்பொருட்களை எடுத்து விநியோகிப்பதற்கு ஆட்கள் பற்றாக்குறையென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இன்னமும் இப்பொருள்களை அனுப்பிவைப்பதிலும் சில இடங்களில் பாதைகள் அழிந்திருப்பதால் கஷ்டமேற்பட்டுள்ளது.

சில சிங்களக் குடும்பங்கள் ஒந்தாச்சி மடத்துக்கும் பெரியநீலாவணைக்கும் இடையில் வீதிகள் அழிந்துபோன நிலையில் உதவிப் பொருட்களை தலையில் சுமந்து சென்று கொடுத்ததாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

போக்குவரத்து வசதியையோ சிரமத்தையோ இந்த நேரத்தில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எப்படியும் நிர்க்கதியாய் நிற்கும் மக்களுக்கு உதவி உயிர்களைக் காப்பாற்றத்தான் வேண்டும்.

நல்லிதயம் படைத்தவர்கள் இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்களென்பதில் ஐயமில்லை.

இதேசமயம் உயிர்தப்பியிருக்கும் பிஞ்சுக் குழந்தைகளை எந்தவொரு அமைப்பாவது பொறுப்பெடுத்து சேவை மனப்பான்மையுள்ள தாய்மார்களை அமர்த்தி அவர்கள் நல்லசூழ்நிலையில் வைத்து சுகாதாரத்துடன் ஆரோக்கியமாக வளரக்கூடியதாகப் பராமரிப்பதற்குதவி செய்யப்படவேண்டும்.

தாங்கள், தாய் தகப்பனை இயற்கை அனர்த்தத்தில் பலிகொடுத்த அநாதைகள் என்ற சிந்தனை அவர்கள் வளர்ந்த பின்னரும்கூட ஏற்படுவதற்கு இடமிருக்கக்கூடாது.

இந்தக் குழந்தைகள் எக்குறையுமின்றி அவர்களுக்கெனவே உருவாக்கப்படும் ஒரு நகரத்தில் எவ்வித பாகுபாடுமில்லாமல் கடவுளின் குழந்தைகள் அல்லது இயற்கையின் குழந்தைகள் என்று வளர்க்கப்படவேண்டும்.

இந்த அனர்த்தத்தால் பெற்றோர், உற்றார் உறவினர் அனைவரையும் இழந்த பிஞ்சுக் குழந்தைகளை சர்வதேச நாடுகளைக் கொண்ட ஒரு அமைப்பின்கீழ் பராமரிப்பதற்கு அல்லது ஐ.நா. நிறுவனமே இக்குழந்தைகளை பராமரித்து வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும்.

தெற்கில் இப்படியான குழந்தைகள் சிலவற்றைச் சில பெற்றோர் தாம் எடுத்து வளர்க்க முன்வருவதாகவும், சிலர் இந்தக் குழந்தைகள் சிலவற்றைக் கடத்திச்செல்ல முற்படுவதாகவும் பத்திரிகைச் செய்திகள் சில தெரிவிக்கின்றன.

இப்பொழுது இக்குழந்தைகளைப் பார்ப்பவர்களுக்கு இரக்கம் ஏற்பட்டு வளர்த்தெடுக்கும் பொறுப்பை சிலர் ஏற்கமுன்வரலாம். இதேநிலை இக்குழந்தைகள் வளர்ந்த பிறகும் நிலைக்குமா என்பது சந்தேகம்.

இப்போது ஆசையுடன் வளர்க்க விரும்பும் பெற்றோர் சிறிது காலத்தின்பின் அவற்றை வேலைக்காகவும் பிழைப்புக்காகவும் பயன்படுத்தமாட்டார்களென்பது என்ன நிச்சயம்.

இன்று குழந்தைப்பேறில்லாமல் இந்தக் குழந்தைகளைப் பொறுப்பேற்றபின் தமக்குக் குழந்தை கிடைத்த பின், தம் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு இந்தக் குழந்தைகளைப் பயன்படுத்த நினைக்கமாட்டார்களா?


இந்த அனர்த்தத்தினால் அநாதரவாகியுள்ள குழந்தைகளை ஐ.நா.அமைப்பைச் சேர்ந்த 'யுனிசெவ்' போன்ற கழகம் தனது பொறுப்பில் எடுத்து ஒரு தனி நகரத்தையே நிர்மாணித்துப் பராமரித்து வளர்த்துப் புதிய சமுதாயமொன்றையே உருவாக்கி வழிகாட்டவேண்டும்.

இதில் தொண்டாற்றுவதற்கு அன்னை திரேசாக்கள் இனித்தான் பிறந்துவரவேண்டுமென்றில்லை. இப்பொழுதே பல திரேசாக்கள் இருப்பார்கள். வாய்ப்புத்தான் கிடைக்கவேண்டும்.

*

- சுதந்திரதீபன்

# 9.0/2004 என்ற குறியீட்டு பெயர்கொண்ட 'சுனாமி' பற்றிய அறிவியல் உண்மைகள்




பூமி, 4.5 பில்லியன் வயது கொண்ட, உருகிய பாறைகளாலான உட்கரமும் குளிர்ந்துவிட்ட வெளி ஓடுமுள்ள ஒரு பெருங்கோளம்.

எவருமே எதிர்பார்த்திராத வேளையில் டிசம்பர் 26 ஆம் திகதி காலையில் எழுந்து ஊழித் தாண்டவமாடிய '9.0/2004' என்று குறியீட்டுப் பெயர் கொண்ட புவியதிர்வின் விளைவான சுனாமி, தென்னாசியப் பிராந்திய நாடுகளில் லட்சத்துக்கு மேற்பட்டோரைக் காவு கொண்டு, உலகின் பெரும் இயற்கைப் பேரனர்த்தங்களில் தன்னையுமொன்றாகத் தடம் பதித்துப் போயுள்ளது. கடந்த நாற்பதாண்டுகளில் இடம் பெற்ற இயற்கையழிவுகளிலேயே மிக மோசமானது என்ற பெயரையும், 1900 ஆம் ஆண்டின் பின்னர் இடம் பெற்றுள்ள சக்திவாய்ந்தவற்றிடை நாலாவது என்ற பெயரையும் அது பெற்றுள்ளது.

9.0 றிச்டர் அளவு கொண்ட கடலடிப் பூகம்பத்தின் விளைவான இந்தச் சுனாமி, கிழக்கே மலேசியாவிலிருந்து, மேற்கே ஆபிரிக்கக் கரைவரை தனது கைவரிசையைக் காட்டியுள்ளது.


கின்னஸ் பதிவுகளின்படி 1896 ஆம் ஆண்டில் ஜப்பானியக் கரையருகில் உருவாகிய ஒரு சுனாமி, 27 ஆயிரம் பேரை மூழ்கடித்தது. இப்படியான இயற்கைப் பேரிடர்கள் அடிக்கடி நிகழாவிடினும் அவை இடம்பெறும் வேளைகளில், கூட்டங்கூட்டமாக மனிதர்களைக் கொன்றொழித்து, கோடானுகோடி மதிப்புள்ள பொருள் நாசத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. நினைவில் பதிந்த இப்படியான சமீபத்திய நிகழ்வுகளிலொன்று 1998 ஆம் ஆண்டில் மத்திய அமெரிக்காவில் இடம்பெற்ற 'மிச்' சூறாவளி. இது, ஹொண்டூராஸ் மற்றும் நிக்கரகுவாவில் பெரும் பகுதியைத் துடைத்து வழித்தது. பத்தாயிரத்துக்கும் மேறபட்டோர் பலியானார்கள். 1970 களில் பங்களாதேஷ் சூறாவளி 5 லட்சம் பேர் வரை காவுகொண்டது. மணிக்கு 230 கி.மீ வேகத்தில் வீசிய காற்றும் அதனால் கிளர்ந்த பேரலைகளும் இதன் கராரணமாயின. ஏறத்தாழ இதேவிதமான ஒரு அழிவை 1976 இல் சீனா சந்தித்தது. 8.3 றிச்டர் அளவிலான பூகம்பமொன்று நாட்டின் வடகிழக்கு நகரான தாங்ஷென் நகரை நிர்மூலம் செய்தது. இதில் பலியானோரின் தொகை இரண்டரை லட்சமென உத்தியோக பூர்வத் தகவல்கள் தெரிவித்தாலும், உண்மையில் அந்தத் தொகை ஏழரை லட்சத்துக்கும் மேல் எனவும் தகவல்கள் வந்தன. ஏறத்தாழ ஓராண்டின் முன் ஈரானில் இடம்பெற்ற 6.3 றிச்டர் அளவுகொண்ட பூகம்பம் பாம் நகரையே அழித்ததுடன், அரை லட்சத்துக்கதிகமானோரையும் உயிர்ப் பலி கொண்டது.

சீனா - உண்மையில் ஆசியா முழுவதுமே - இப்படியான இயற்கைப் பேரழிவுகளுக்கு நூற்றாண்டு நூற்றாண்டாக முகங்கொடுத்தே வந்துள்ளமை வரலாறாகியுள்ளது. 1556 இல் சீனாவில் ஏற்பட்ட புவி நடுக்கத்தில் எட்டு லட்சத்துக்கும் அதிகமானோரும், அதே நாட்டில் 1887 இல் மஞ்சள் நதி பெருக்கெடுத்தபோது ஒன்பது லட்சம் பேரும், இந்தோனேஷியாவின் சும்பாவா தீவில் தம்போரா எரிமலை வெடித்தபோது தொண்ணூறாயிரத்துக்கு மேற்பட்டோரும் இறந்துபோனமை மனிதகுல வரலாற்றில் சோகப் பதிவுகளாயுள்ளன.


டிசம்பர் 26 சுனாமியின் மூலம் இந்தோனேஷியாவின் வட சுமாத்ராவின் மேற்குக் கரைக்கப்பால் அவ்வூர் நேரம் 7.59 இற்கு இடம் பெற்ற அந்த 9.0 றிச்டர் அளவு கொண்ட கடலடிப் பூகம்பமாகும். அந்தப் பூகம்பத்தின் காரணமானவை - புவிக்கோளின் மேற்படைத் தகடுகளில் இந்தியத் தகடானது அசைந்து, பர்மாத் தகட்டின் கீழ் நகர்ந்தமையால் எழுந்த விசைகள்! அது எவ்வாறு என்பதைப் பார்க்கலாம்.

நாலரை பில்லியன் ஆண்டுகள் வயதான இந்தப் புவிக்கோளத்தின் மேற்பரப்புக் குளிர்ந்திருப்பினும் அதன உட்பகுதி இன்னமும் கொதித்து, உருகிக் குமுறும் பாறைகள் நிறைந்தது. இந்த மேற்பரப்பு, அதாவது கோளத்தின் புறஓடு, பல்வேறு பாறைத் தகடுகளாலானது இந்தத் தகடுகள், அவற்றின் அடியிலிருக்கும் கொதி குழம்பின் விளைவாய், ஆண்டுக்கு ஏறத்தாழ பத்து சென்ரி மீற்றர் வரை அசையும் இயல்பு கொண்டவை. யுரேஷியன், பிலிப்பைன், ஆஸ்திரேலியன், பசுபிக், ஜீவான் டி.ஃ.பூகா, கொகோஸ், நஸ்கா, கரீபியன், வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஸ்கொட்டிய, ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, பர்மியா என்றெல்லாம் பெயரிடப் பட்டுள்ள இந்த மேல் ஓட்டுத் தகடுகளில் மேலே குறிப்பிட்டவாறு இந்தியத் தகடானது நகர்ந்து பர்மியத் தகட்டின் கீழ் சற்றுப் பதிந்தமைதான் டிசெம்பர் 26 இல் நிகழ்ந்த விடயம். இப்படி இரண்டு தகடுகள் ஒன்றோடொன்று உராய்ந்து நகர்கையில் பூகம்பங்கள் வெடிக்கின்றன. உலகின் பெரும் பூகம்பங்கள் யாவும் இவ்வாறாக ஏற்பட்டவையே. 1960 இல் சிலியில் ஏற்பட்ட 9.5 அளவுகொண்ட பூகம்பம், 1964 இல் அலஸ்காவில் 9.2 மற்றும் 1957 இல் 9.1 அளவு கொணட பூகம்பங்கள், 1952 இல் 9.0 அளவுடன் கம்சாத்காவில் உணடான நில அதிர்வு யாவும் இந்த வகையினவே.


இவ்வாறான ஒரு பூகம்பம் கடலினடியில் ஏற்படும்போது, அதன் விளைவாய் எழுபவையே இந்த - பல்லாயிரம் மைல்வரை பரவக்கூடிய - 'சுனாமி'ப் பேரலைகள். இவை வெறும் புவியதிர்வு விசையால் மட்டும் ஏற்படுபவையல்ல. '9.0/2004' இன் வேளையில் புவியோட்டுத் தகடுகளின் விலகலால், ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்துக்கு, கிட்டத்தட்ட 10 மீற்றர் உயரங்கொண்ட ஒரு பொருமல் கடலடியில் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன் விளைவாய் (1000 கி.மீ x 10 மீ) கனவளவு கொண்ட நீர், இடம்பெயர்க்கப் படுவது புரிந்துகொள்ளப்படக் கூடியதே. பொதுவாக, விலக்கப்படும் இந்த நீரானது ஆழ்கடல் பகுதிகளில் 5 - 10 மீற்றர் உயரமே கொண்ட அலைகளாக, மணிக்கு சில நூறு கி.மீ வேகத்தில் பரவினாலும் (உண்மையில், இந்த வேகம் நில அதிர்வு அலைகளின் வேகத்திலும் மிகக் குறைவானதே) கரைப் பகுதிகளை அண்மிக்கையில் - அவற்றின் வேகம் சற்றுக் குறைய நேரிடினும் ஆழங் குறைகிற காரணத்தால், உயரம் 10 - 20 மீற்றர்வரை அதிகரிக்கும். இதுதான் அநேகமாய் இங்கும் நடந்தது.




பூகம்பங்களை அவை உருவாக்கும் வெவ்வேறுவித அலைகளைக் கொண்டு கண்டறிய முடியும். P என்கிற முதனிலை அலைகள் புவி மையத்தில் அதிவேகமாக செல்கின்றன. S என்கிற இரண்டாம் நிலை அலைகள் அவற்றிலும் மொதுவாகவே செல்கின்றன.





சுமாத்ரா கடற் பகுதியில் மையங்கொண்ட சுனாமி என்ற புவிநடுக்கத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு, கரையோரத்தைத் தாக்குவதைக் காட்டும் வரைபடம்



வெளி ஓடு, பல்வேறு தட்டுகளாலானது. இவை கொதிகுழம்பின் மேற்காவுகைகளால் அசைக்கப்பட்டு, ஆண்டுக்கு ஏறத்தாழ 10 செ.மீற்றர் இடம்பெயர்கின்றன.




புவியோட்டுத் தகடுகளின் விளிம்புகளையொட்டியே அநேகமான பூகம்பங்கள் இடம்பெறுகின்றன.



இரு பாறைத் தகடுகளின் பகுதிகள் திடீரென ஒன்றுக்கெதிராக இன்னொன்று அசைகையில் பூகம்பம் உருவாகிறது.




மேற்பரப்பு மையத்திலிருந்தும் அலைகள் பரவுகின்றன. மேற்பரப்பு மையமென்பது கீழிருக்கும் உண்மையான பூகம்ப மையத்தின் நேர்மேலே உள்ள பகுதியாகும்.

கடலினடியில் பூகம்பமொன்று உருவாகும்போது, அது ஆயிரக்கணக்கான மைல்கள்வரை பரவக்கூடிய சுனாமிகளை உருவர்க்கும்.

தகவல் - இணையத்தளம்

## ஜனவரி - 02




▶ 1782 - கண்டியின் கடைசி அரசன் கீர்த்திசிறி இராசசிங்கன் நினைவு நாள்.

▶ 1893 - நினைவுத் தபால் முத்திரைகள் வெளியீடு முதன் முதல் இன்றுதான் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் கொலம்பியா நகரில் நடந்த கண்காட்சி ஒறைக் குறிக்கும் வகையில் இந்தத் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

▶ 1918 - பிரிவுக்கென விமானப் பிரிவுக்கென விமானத்துறை அமைச்சு நிறுவப்பட்டநாள் இன்றாகும்.

▶ 1959 - கியூபா நாட்டில் 'பார்டிஸ்டா' வின் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்திய பிடல் காஸ்ரோ தமது கெரில்லாத் தாக்குதல்களை நிறுத்திவிட்டுத் தமது படைகளுடன் நாட்டைக் கைப்பற்றினார். டாக்டர் மாக்யூல் யூராட்டியா தலைமையில் புதிய அரசையும் இன்று அமைத்தார்

▶ 1988 - ஆஷ்லாண்ட் எண்ணைக் கம்பனிக்குச் சொந்தமான எண்ணைத் தாங்கிக் கப்பலில் விரிசல் ஏற்பட்டதன் காரணமாக 38 லட்சம் லீற்றர் டீசல் எண்ணை பீட்ஸ்பார்க் அருகே மோஸொல்லோ ஆறில் வழிந்தோடியது. இதனால் பென்சில்வோனியா, ஒஹியோ ஆகிய நகரிலுள்ள பல்லாயிரக்கணக்கான வீடுகளுக்குக் குடிநீர் விநியோகம் துண்டிக்கப் பட்டது.

▶ 1993 - சிங்களக் கடற்படையினரால், யாழ்.கிளாலி கடல் நீரேரியில் 50 இக்கும் மேற்பட்ட பயணிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

## சுனாமி கடற்கொந்தளிப்புக் குறித்து

# எச்சரிக்கை செய்யத் தவறியதாக விஞ்ஞானிகள் மீது குற்றச்சாட்டு!

(புதுடெல்கி)

சுனாமி பேரலைகள் தாக்குதல் குறித்து முன்னரே எச்சரிக்க இந்திய விஞ்ஞானிகள் தவறிவிட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்திய புவிகாந்தவியல் நிலைய முன்னாள் இயக்குநர் பி.பி சிங், இது தொடர்பாக கூறியதாவது.

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து தகவல்கள் இந்திய அறிவியல் அமைப்புகளுக்கு கிடைத்தவாறு இருந்தன. ஆனால் இந்திய விஞ்ஞானிகள் பொதுமக்களையும் அரசையும் எச்சரிக்கத் தவறிவிட்டனர்.

இந்திய வானிலைத்துறை, தேசிய புவியமைப்பியல் ஆராய்ச்சி மையம், பாபா அணு ஆராய்ச்சி மையம் ஆகிய அமைப்புகள் இந்த விடயத்தில் முக்கிய பங்காற்றியிருக்கமுடியும்.

அதிகாரவர்க்க நடைமுறைகளைத் தாண்டி இந்திய விஞ்ஞானிகள் செயற்பட்டிருந்தால் தென் மாநிலங்களில் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும்.

சுமாத்திராவில் சுனாமி பேரலைகள் ஏற்பட்ட உடனே தன் வசமுள்ள புயல் எச்சரிக்கை மையங்களைப் பயன்படுத்தி கடலோரமக்களை இந்திய வானியல்துறை எச்சரித்திருக்க வேண்டும் என்றார் பி.பி.சிங்.

சுனாமி எச்சரிக்கை மையங்களை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவை செயற்படுத்தினாலும் பலன் ஏற்படாது என பேராசிரியர் டி.சந்திரசேகரன் கூறினார்.

நில நடுக்கங்களைக் கண்காணிக்கும் மையங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இந்தோனேஷியாவில் 40 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அவற்றில் சில 7.3 ரிக்டர் அளவில் பதிவாயின. அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் 12 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இவை 5.5 ரிக்டர் அளவுக்கும் அதிகமாகப் பதிவானது.

ஆனால் அப்பகுதியில் நடந்து கொண்டிருப்பதை உணர நிலநடுக்கவியல் விஞ்ஞானிகள் தவறிவிட்டனர். போதுமான விபரங்கள் கிடைத்த நிலையிலும் நிலநடுக்கவியல் விஞ்ஞானிகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பது தெரியவில்லை.

சுனாமி எச்சரிக்கை மையங்களுக்கும் இதேகதிதான் ஏற்படும். அந்தமானில் சுனாமி பேரலைகள் தாக்கிய பின்னாலும் தென்மாநிலங்களை எச்சரிக்க 30 நிமிடங்கள் இருந்தன.

அப்போது எச்சரித்திருந்தாலும் பெருமளவு உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாம் என்றார் அவர்.

கிடைத்த தகவல்களைத் தொகுத்து எச்சரிக்கை செய்யும் அதிகாரம் இந்திய வானியல் துறைக்கே உண்டு என்று பாபா அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கூறினர்.

சுனாமி அலைகள் குறித்து முன்னரேயே தெரிந்தாலும் அணு ஆராய்ச்சி மையம் எச்சரிக்க முடியாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

# அந்தமான் தீவில் நேற்றும் நிலநடுக்க அதிர்வுகள்!

(புதுடெல்கி)

சென்னையிலிருந்து 1190 கிலோ மீற்றர் தொலைவில் அந்த மான் நிகோபார் தீவுகள் உள்ளன. 572 சிறு சிறு தீவுகளைக் கொண்ட இந்தப் பிரதேசத்தை கடந்த ஒரு வாரமாக நிலநடுக்கம் தொடர்ந்தும் தாக்கி வருகின்றது.

கடந்த ஞாயிறு காலை அங்கு 9 தடவை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன்பின்னர் அந்தமான் தீவுகளில் நேற்றுக்காலை வரை தினம் தினம் நிலநடுக்கமும் நில அதிர்வுகளும் மாறி மாறி தாக்கி வருகின்றன. நேற்று முன்தினம் இரவு 11.32 மணிக்கு நிகோபார் தீவு அருகே திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அது 5.2 ரிக்டர் அளவுக்கு பதிவாகியிருந்தது.

அதன்பின்னர் நேற்று அதிகாலை 3.40 மணிக்கு அந்தமான் தீவு அருகே மற்றொரு நில நடுக்கம் உருவானது. அது 5.0 ரிக்டர் அளவுக்கு பதிவாகியது. இந்த 2 நில நடுக்கங்களாலும் எந்த சேதமும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த ஒரு வாரத்தில் அந்தமான் நிகோபார் தீவுகளில் சுமார் 30 தடவை நில நடுக்கம் ஏற்பட்டு விட்டது. அதைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட தடவை நில அதிர்வுகள் உண்டானது.

இத்தகைய தொடர் தாக்குதல்கள் அந்தமான் தீவு மக்களை அதிர்ச்சிக்குள் நீடிக்க வைத்துள்ளது. அந்த தீவுகளிலுள்ள 5 ஆயிரம் பேரைக் காணவில்லை.

சுமாத்திராதீவு நேற்றுக்காலை நிலநடுக்கத்தால் குலுங்கியது. அந்த நில நடுக்கம் காலை 7.26 மணி அளவில் சுமத்திரா தீவின் மேற்கு கடலோரப் பகுதியில் மையம் கொண்டிருந்தது.

அந்தமான் தீவுகளை சுற்றி நிற்கும் சுமார் 40 கடற்படைகப்பல்கள் மற்றும் விமானப் படையின் 50 ஹெலிகொப்ரர்கள் மூலம் மீட்புப்பணிகளும் நிவாரணப் பணிகளும் நடந்து வருகின்றன. முப்படைகளை சேர்ந்த 2 ஆயிரம் வீரர்கள் காணாமல் போனவர்களை தேடி வருகிறார்கள்.

## கிழக்கில் வெள்ளப்பாதிப்புக்கள்









அம்பாறை, மட்டக்களப்பு பகுதிகள் கடும் மழையால் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதையும், இந்திய விமானப்படை ஹெலி அவசர நிவாரணப் பொருட்களுடன் தரையிறங்குவதையும் காணலாம்.



திருக்கோவில் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்களை ஹெலி ஒன்று எடுத்துச் செல்கிறது.

### சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள்

# சொந்த இடம் திரும்பும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள், தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பும் வேளையில் எச்சரிக்கையுடன் இருந்து பின்வரும், அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் சுவாசத் தொகுதி மற்றும் வயிற்றோட்ட நோய்கள் இந்தப் பகுதிகளில் பெருகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் மிகவும் அவதானமாக இருக்குமாறும், யாழ்ப்பாண பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை வெளியிட்டுள்ள மக்களுக்கான அறிவுறுத்தலில் தெரிவித்துள்ளது.

எனவே மக்கள் உங்கள் பகுதிகளுக்கு நீங்கள் திரும்பிச் செல்லும்போது பின்வரும் நடைமுறைகளைக் கவனமாக கைக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

* உங்கள் வீட்டிற்கு திரும்பிச் செல்லும்போது நீரில் ஊறிப்போயுள்ள தூண், சுவர், கதவுபோன்றவை விழுந்து ஆபத்தேற்படுத்தலாம். *ஆணிகள் கண்ணாடித் துண்டுகள், தகரங்கள் போன்றவற்றால் காயங்கள் ஏற்படலாம் * வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருக்கவும். * நீர் தேங்க முடியாதவாறு சூழலைப் பேணுங்கள். * இறந்த விலங்குகளின் உடல்களை உரிய முறையில் அப்புறப்படுத்த உதவுங்கள். * ஏதாவது விபத்து ஏற்பட்டால் மருத்துவ உதவியை நாடவும். *மின்சார ஒழுக்குகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவதானமாக இருங்கள். * நீங்கள் இருக்கும் முகாம் ஒரு பொது இடமாகையால் புகைத்தலையும், மது அருநதுதலையும் தவிர்க்கவும்.

### சுவாசத் தொகுதி நோய் குணங்குறிகள்:-

* மூக்கில் சளி வடிதல், இருமல், தும்மல், மூச்சுக்கஷ்ரம்
* இவை காய்ச்சலுடனோ அல்லது இல்லாமலோ ஏற்படலாம்.
* இந்தக் குணங்குறிகள் ஏற்பட்டால் சுகாதார ஊழியருடன் தொடர்பு கொள்ளவும்.
* இந்த நோய்கள் பரவுவதை தவிர்ப்பதற்காக - தும்மும்போதும், இருமும் போதும் மூக்கையும், வாயினையும் கைக்குட்டையினாலோ சிறிய துணித் துண்டொன்றினாலோ மூடிக்கொள்ளவும்.
* யாராவது தும்மும் போதோ, இருமும்போதோ அவர்களிடமிருந்து விலகி இருங்கள்.
* புகைத்தலைத் தவிர்க்கவும்.

### வயிற்றோட்டம் ஏற்படாதிருக்க

* எப்போதும் கொதித்தாறிய நீரையே குடியுங்கள். அது கிடைக்காதபோது குளோரின் இடப்பட்ட நீரையோ, போத்தலில் அடைக்கப்பட்ட நீரையே பாவியுங்கள்.
* உடன் தயாரிக்கப்பட்ட உணவையே உண்ணுங்கள்.
* தயாரித்த உணவை மூடி வைத்து இலையான் மொய்க்கா வண்ணம் பாவிக்கவும்.
* உணவை தயாரிக்க முன் கைகளை கழுவவும்.
* உணவு உண்ணு முன்பும், சிறுவர்களுக்கு உணவு ஊட்ட முன்பும், மலசலகூட பாவனையின் பின்பும் கைகளைக் கழுவவும்.
* உங்கள் சுற்றுச் மூழலை சுத்தமாகப் பேணவும். இதற்காக சுகாதாரக் குழு ஒன்றை அமைக்கவும்.
* சடலங்களையோ, ஏனைய கழிவுகளையோ உரிய முறையில் அப்புறப்படுத்த உத்தியோகத்தர்களுக்கு உதவவும்.
* மலசலம் கழிப்பதற்கு மலசலகூடத்தையே பாவிக்கவும். சிறுவர்களின் மலமும் மலசலகூடத்தினுள்ளேயே அப்புறப்படுத்தப்பட வேண்டும். உங்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 முறைகளுக்கு மேல் நீரோட்டமாக மலம் கழிக்க வேண்டி ஏற்பட்டால் சுகாதாரஊழியருடன் தொடர்பு கொள்ளவும்.

இவற்றைவிட பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் பொருட்களை வழங்குவோரும் பின்வரும் அறிவுறுத்தலகளை பின்பற்றுமாறு கேட்டுகப்பட்டுள்ளனர்.

எப்போதும் குடிப்பதற்கு சுத்தமான குடிநீரையே வழங்குங்கள்.

* உணவுப் பார்சல்கள் தயாரிக்கும் போது எளிதில் பழுதடையக்கூடிய உணவுகளைத் தவிர்க்கவும். உதாரணமாக சலாட், சம்பல் போன்றவை. முடியுமானால் அவர்கள் உணவை அவர்களே சமைக்க உதவி புரியுங்கள்.
* உணவுப் பொருட்களை வழங்க விரும்பினால் குறிப்பிட்ட நாள்களுக்காவது கெடாதிருக்கக்கூடிய உணவு வகைகளான உலர் உணவு வகைகளைஉதாரணமாக, சீனி, தேயிலை, பால்மா, பிஸ்கட், கடலைப்பருப்பு, கருவாடு போன்றவற்றை வழங்கவும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கையில் பாதிக்கப்பட்டோருக்கு 100 மில்லியன் டொலர்களை உலக வங்கி ஒதுக்கியுள்ளது!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கீடு செய்துள்ள உலகவங்கி - இதில் 100 மில்லியன் டொலரை இலங்கைக்கு வழங்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

உலகவங்கியின் செய்தித் தொடர்பாளர் இதுகுறித்து ஏ.எவ்.டி. நிறுவனத்துக்குக் கூறுகையில் -

இலங்கையில் பெருமளவிலான மக்கள் கடற்கரையோரங்களிலேயே வாழ்ந்து வருவதால், மனித பலம் மட்டுமன்றி அதனது பொருளாதாரமும் மிகப் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதனாலேயே தேவையின் நிமித்தம் கருதி இந்த நிவாரண நிதி பகிர்ந்தளிக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாதிப்புக்கு முன்னர், ஏற்கனவே வேறு பல திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியும் இந்த 100 மில்லியன் டொலர்களில் ஒரு பகுதியாகும்.

இலங்கையுடன் இந்தோனேஷியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளும் நிதியுதவியை எதிர்பார்ப்பதனால் முன்னர் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த அவசர காலத்தில் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பல விமர்சனங்களுக்குப் பின்னர், பாதிக்கப்பட்ட நாடுகளின் நிவாரண நிதிக்கென அமெரிக்க அரசு 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

இதுவரை கிடைத்த தகவல்களின்படி இலங்கைக்கு நிதியுதவியளிக்க முன்வந்துள்ள சில நாடுகளின் விபரம்-

சீனா - 68 மில்லியன் டொலர்கள், ஸ்பெயின் - 63 மில்லியன் டொலர்கள், அவுஸ்ரேலியா - 27 மில்லியன் டொலர்கள், கனடா - 3.3 மில்லியன் டொலர்கள், நோர்வே - 8.2 மில்லியன் டொலர்கள், பிரான்ஸ் - 5 மில்லியன் யூரோஸ், ஜேர்மனி - 2 மில்லியன் யூரோஸ்.

## பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தளபதி கேணல்பானு விஜயம்!

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மற்றும் புலிகளின் முக்கிய தளபதிகள் அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்து அங்கு பாதிக்கப்பட்ட இடங்களைப பார்வையிட்டனர்.

அம்பாறை மாவட்டத்தளபதி ஜனார்த்தனன், மட்டக்களப்பு மாவட்டத்தளபதி ராம், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோருடன் கேணல் பானு அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கும் சென்று பர்வையிட்டதுடன் பாதிக்கபபட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

அதேசமயம் உதவி நிவாரணப் பணிகள் குறித்தும் புலிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் குறித்து கௌசல்யன் அம்பாறை அரச அதிபருடன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு - கல்முனை வீதியில் உதயபுரம் சந்தியில் சேதமடைந்துள்ள வீதியைத் திருத்தும் பணியில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளும் ஈடுபட்டுள்ளனர். தளபதிகள் பிரபா, ரமணன் ஆகியோரின் நேரடிக்கண்காணிப்பில் இந்தப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

## முகமட் அலி காலமானார்!

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எ.ஈ.எச்.முகமட் அலி (வயது 77) நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

இவரது இறுதிச் சடங்கு நேற்றுக்காலை இடம்பெற்றது.

## வடக்கு.....

சிகிழக்கு- 2,000, முல்லைத்தீவு - 2,750, திருகோணமலை - 2,431 பேர் காணமற் போயுள்ளனர்.

இதேவேளை 1,55,912 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அதில் அம்பாறை - 44,000, மட்டக்களப்பு - 52,117, யாழ்ப்பாணம், வடமராட்சிகிழக்கு - 16,174, முல்லைத்தீவு - 5,800, திருகோ்ண மலை - 37,821 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதன்படி 6,03,484 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

## படையினர்....

நிறுவனப் பிரதிநிதி ஒருவரும் தாக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

குடத்தனை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலுள்ள நலன்புரி நிலையத்துக்கு நேற்றிரவு நூற்றுக்கணக்கான படையினர் சென்று அங்கு தங்கியிருந்த சிறுவர்களை அழைத்து உணவுப் பொருட்களை வழங்கி உண்ணுமாறு வற்புறுத்தினர்.

இந்தநிலையில் பெற்றோர்கள் இதனைத் தடுக்க முற்பட்டவேளை படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்கள் படையினரை வெளியேறுமாறு கோஷமிட்டனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு எரிந்து கொண்டிருந்த வெளிச்சம் திடீரெனத் துண்டிக்கப்பட்டது.

இதன்போது படையினருக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமகன் ஒருவரும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவரும் தாக்கப்பட்டனர்.

படையினரின் அடாவடித்தனத்தால் அச்சமடைந்த மக்கள் அந்த நலன்புரி நிலையத்திலிருந்து வெளியேறி அந்தப் பகுதியிலுள்ள அன்னை வேளாங்கன்னி மாதா கோயிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அரசியற்துறையினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கிழக்குப் பகுதியில்....

ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

மீராகேணி, மிச்ச நகர், சதாம் ஹுசைன் கிராமம், ஐயங்கேணி, அம்மன்குடா, முதலாம் குறிச்சி, ஆகிய கிராமங்களிலிருந்து சுமார் 1500 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் நான்கு அடிக்கு மேலாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏறாவூர் பிரதான வீதியில், காட்டுப் பள்ளி வீதி, கன்னங்குடா ஆகிய வீதிகளில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அக்கரைப்பற்று, கல்முனைப் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சில வீதிகளில் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸாா கேட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டம் அல்லை - கந்தளாய் வீதியில் 3 அடி உயரத்திற்கு நீர் பாய்வதால் மூதூர், ஈச்சிலம்பற்று பிரதேசங்களுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளது நேற்று முன்தினம் மாலை 2 லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் மீளவும் திருப்பிக் கொண்டுசெல்லப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் இரவு 4 மணித்தியாலயங்களில் 122 மில்லி மீற்றர் மழை பெய்ததால் மீண்டும் இந்தப் பகுதியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மழையின் அளவு அதிகரித்ததன் காரணத்தால் கந்தளாய் குளத்தின் நீர் அளவு 2500 ஏக்கர் கன அடி உயர்ந்துள்ளது. இதனால குளத்தின் எட்டு வான் கதவுகள் நேற்று முன்தினம் காலை 11 மணி தொடக்கம் திறந்துவிடப்பட்டது.

கந்தளாய் குளத்து நீர் திறந்து விடப்பட்டதால் தம்பலகாமம் பகுதி வெள்ளத்தில் மூழ்கக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதாகவும், மக்கள் அவதானமாக இருக்குமாறும், மிகவும் தாழ்ந்த பகுதியில் உள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்லுமாறும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர். இதனால் தம்பலகாமம் முள்ளியடியைச் சேர்ந்த 25 குடும்பங்கள் ஆதிகோணேஸ்வரா மகாவிதியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 315.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. காத்தான்குடி, ஆரையம்பதி, வவுணதீவு, கொக்கட்டிச் சோலை, நாவற்குடா, இருதயபுரம், முன்னைச்சோலை, செங்கலடி, வந்தாறுமூலை, பூம்புகார், சித்தாண்டி ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

கடற் கொந்தளிப்பால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் தற்காலிக இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## தென்னிலங்கை....

இந்தோனேசிய கடற் பகுதியில் 6.2 றிக்சர் அளவில் அதிர்வு உணரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் 6.6 றிக்சர் உணரப்பட்டதாகவும் தெரிவித்தனர். மீண்டும் அவர்கள் 6.5 றிக்சர் அளவிலான அதிர்வு உணரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

எனினும், இதனால் சுனாமி ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் எதுவுமே இல்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே இலங்கை மக்கள் சிறிதேனும் சுனாமி நிலை ஏற்படும் என்று பயம் கொள்ளவேண்டாம். அவ்வாறான நிலை ஏற்படக்கூடிய நிலைமைகள் இல்லை. நான் ஏற்கனவே கூறியபடி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமத்திராவில் இடம்பெற்ற நில அதிர்வு நிலையின் பின்னர் சிறிய சிறிய அதிர்வுகளாக, சுமார் 79 அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

மேலும் இந்த அதிர்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட புவியதிர்வின் தாக்கமேயாகும் எனவே இவை எந்த ஒரு கட்டத்திலும் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்பதை உறுதியாக கூறமுடியும் எனத் தெரிவித்தார்.

## 1500 மரைன்.....

மாநாட்டில் அமெரிக்காவில் அனர்த்த மீட்புக்குழுவின் தளபதியான கேணல் தொமஸ் கொலின்ஸ் மற்றும் யு.எஸ்.எயிட் அதிகாரியும் கலந்து கொண்டனர்.

அங்கு தகவல் வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் ஜெப்றி லன்ஸ்ரீட் -

1500 அமெரிக்க மரையின் கடற்படையினர் எசெக்ஸ் வகை விமானம் தாங்கி கப்பலான யு.எஸ். எவ். பொன் ஹோம் றிச்சட்டின் மூலம் கொழும்புக்கு வரவுள்ளனர்.

இதில் ஹெலி இறங்கு தளமும் 20 ஹெலிகொப்டர்களும் உள்ளன. இந்தக் கப்பலில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட காலி, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளில் 5 சிறிய ஹொவர் கிராப்ட் சகிதம் உதவி மீட்புப் பணிகளில் ஈடுபடவுள்ளது.

இந்த மீட்பு நடவடிக்கைக்கு அமெரிக்காவின் c - 130 சரக்கு விமானம் உதவிகளை வழங்கும்.

200 அமெரிக்க மரைன் படையினர் இன்று பிற்பகல் அல்லது நாளை காலை கொழும்பு வந்து - கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புக்களை நிறுவவுள்ளனர்.

வடக்குக் கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகள் உட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்த உதவிப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைவரவுள்ள யு.எஸ்.எவ். பொன் ஹோம் றிச்சட் விமானம் தாங்கிக் கப்பல் 100 தொன் எடையுள்ளது. இந்தக் கப்பலில் 1944 முதல் பணியில் ஈடுபட்டு வருகிறது.

## உதவிப்.....

களை இறக்கிவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளன. உதவிப் பொருட்களுடன் விமானங்கள் தற்போது வருவது அதிகரித்துள்ளதனால் சில நாடுகள் இலங்கையின் அறிவித்தலுக்காக காத்திருக்கின்றன.

இவற்றுடன் தற்போது பெருமளவு உதவிப்பொருட்கள் வருவதனால் விமான நிலையத்தில் களஞ்சியசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வரும் பல்வேறு உதவிப் பொருட்களையும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்புவதற்கு பல வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடற்கொந்தளிப்புக்குள்ளான மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களூடாக இந்த உதவிப்பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப் பொருட்களை வழங்குவதில் எழுந்துள்ள சிக்கல்களை கண்டறிவதற்காக சமூகசேவைகள் திணைக்களமும், அரசபொது சேவைகள் திணைக்களமும் அரச பொதுஉள்நாட்டலுவல்கள் அமைச்சும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்துள்ளன.

(தே)

## யுனிசெவ் உயரதிகாரி இலங்கை வருகிறார்!

(கொழும்பு)

யுனிசெப் உயர்மட்டப் பிரதிநிதி பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக இலங்கை வரவுள்ளார்.

இன்று கொழும்பு வரும் யுனிசெவ் உயர்மட்டப் பிரதிநிதி மக்கரோல் பெலிஸியா. மட்டக்களப்பு - அம்பாறை மற்றும் தென்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளதுடன், நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் சிறுவர்களின் நலன் குறித்தும் மதிப்பீடு செய்யவுள்ளார்.

இவர் நாளை காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதுடன் - முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் பார்வையிடவுள்ளார்.

## புலோலி வாசி விபத்தில் பலி!

(வடமராட்சி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வான் ஒன்றில் பயணம் செய்த புலோலியைச் சேர்ந்த ஒருவர் கொக்கிராவ என்ற இடத்தில் நடைபெற்ற விபத்தொன்றில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான மயிலவாகனம் இராமச்சந்திரன் தனது மகள் உட்பட மேலும் இருவருடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தபோது, கொக்கிராவ என்னுமிடத்தில் இன்னொரு வானுடன் மோதி விபத்துக்குள்ளானபோது சம்பவ இடத்திலேயே இராமச்சந்திரன் உயிரிழந்தார் எனத் தெரியவருகிறது.

## பணிநிலை வேண்டுகை

1.பக்க வடிவமைப்பாளர்கள்
*Page Maker, Photoshop, Coral draw* தெரிந்தவர்கள் தேவை.

2.கணினி தட்டெழுத்தாளர்கள்
திறமையாக Type செய்துகொள்ளக் கூடியவர்கள் தேவை
**D.T.P.** யில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.சிற்றூழியர்கள் - இயந்திர உதவியாளர்கள்
அலுவலகத்தில் சிற்றூழியராக பணியாற்ற நல்லொழுக்கமுடையவர்கள் தேவைப்படுகின்றனர். அச்சு இயந்திரத்தில் உதவியாளர்களாகப் பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் தேவை.

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 03.01.2005 காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

(இ)

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி ஈஸ்வரி பாலசுப்பிரமணியம்

எமது நிறுவன உரிமையாளரின் மாமியாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவிப்பதோடு அமரர் ஈஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுந்தர் வெளியீடு
844 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
021-2227086

அலுவலக ஊழியர்கள்
தொழில்நுட்பவியலாளர்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.